## ஸத்திய தரிசனம்.

மகாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

பாகம் 4. அத்தியாயம் 41.

### கோகலேயின் தர்மம்.

எனக்கு இங்கிலாந்தில் ஏற்பட்ட சுவாசப்பை சம்பந்தமான ரோகத்தைப் பற்றி முன்னமே அறிவித்திருக்கின்றேன். கூடிய விரைவில் கோகலேயும் லண்டனுக்குத் திரும்பி வந்தார். நானும் ஸ்ரீ. காலன்பாக்கும் முறை தவறாமல் அவரைப் போய்ப் பார்த்து வந்தோம். நாங்கள் விசேஷமாக மகா யுத்தத்தைப் பற்றியே பேசுவது வழக்கம். அப்போது ஸ்ரீ. காலன் ஐரோப்பாவின் பெரும் பான்மையான இடங்களில் சுற்றித் திரிந்தவர் ஆகையாலும், ஜர்மனி தேசத்தின் பூகோள சாஸ்திரம் நன்கறிந்தவர் ஆகலாலும் அவர் மகா யுத்தத்தில் சம்பந்தப்பட்ட பல இடங்களையும் படத்தில் உடனுக்குடன் காட்டி வருவார். எனக்கு மேற்படி நோய் உண்டான போது நாங்கள் தினசரியும் இந் நோயைப் பற்றியும் பேச வேண்டியதாயிற்று. அப்போது என் ஆகாரத்தைப் பற்றிய பிரஸ்தாபம் அதிகம் வரும். நான் கடலைக் காய், எலுமிச்சம் பழம், ஆலிவ் எண்ணெய், பச்சை திராக்ஷைப் பழம் முதலியவைகளையும் உட் கொள்வது வழக்கம். நான் பழம், கிராம்புத் தினுசுகள் முதலியவைகளை அடியோடு விலக்கி விட்டேன்.

டாக்டர். ஜீவராஜ மேத்தா எனக்கு சிகிச்சை செய்து வந்தார். அவர் என்னைப் பால், கிராம்புத் தினுசுகள் முதலியவற்றை உட் கொள்ளும்படி வற்புறுத்தினர். ஆனால் நான் அதற்கு ஒப்பவில்லை. இவ் விஷயம் கோகலேயுக்குத் தெரிந்து விட்டது. நான் பழ ஆகாரமே சிறந்தது என்று கூறிய சமாதானங்களை யெல்லாம் அவர் பொருட்படுத்தாமல் டாக்டர் என் தேக சௌக்கியத்தின் பொருட்டு எதை ஆகாரமாக உட் கொள்ளச் சொல்லுகிறாரோ அதை நான் சாப்பிட வேண்டுமென்று எனக்கு வற்புறுத்திக் கூறினர்.

கோகலேயின் வற்புறுத்தலுக்கு இணங்காமலிருப்பது எனக்கு மிகச் சிரமமாக இருந்தது. நான் மறுப்பதை அவர் ஏற்றுக் கொள்ள வில்லையென்பதை அறிந்து கொண்டு இதைப் பற்றித் தீர யோசித்து முடிவு செய்வதற்காக இருபத்து நான்கு மணி நேரம் சாவகாசம் கொடுக்கும்படி கேட்டேன். அன்றுமாலை நானும் ஸ்ரீ.காலன் பாக்கும் திரும்பி வந்ததும் என் கடமை என்ன என்பது பற்றி யோசித்தோம். என் அனுபவங்களில் ஸ்ரீ. பாக் உடன் இருந்தவர். அவர் என் முறையை விரும்பியவர். ஆயினும் என் தேக சௌக்கியத்தின் பொருட்டு அவைகளை விட்டு விட வேண்டுமானால் விட்டு விடுவதே உசிதமென்று அவர் நினைப்பதாக எனக்குத் தோன்றிற்று. எனவே நான் என் மனச் சாக்ஷியின்படி இவ் விஷயத்தில் தனியாக யோசித்து முடிவு கூற வேண்டியவனானேன்.

### எனது உறுதி.

இரவு முழுதும் இதைப் பற்றியே யோசித்தேன். என் அனுபவத்தை விட்டு விடுவதென்றால் அவ்வழியில் எனக்கிருக்கும் எண்ணங்களையும் விட்டு விட வேண்டியதாயிருக்கிறது. மேலும் அதனால் நன்மை இருக்குமென்றும் எனக்குப் புலப்பட வில்லை. எனவே நான் கோகலேயின் வற்புறுத்தலுக்கு எவ்வளவு தூரம் இணங்கலாமென்பது பற்றியும், தேக சௌக்கியமென்னும் காரணத்துக்காக எவ்வளவு தூரம் என் அனுபவத்தில் மாற்றத்தைக் கைக் கொள்ளலாமென்பது பற்றியும் யோசித்தேன். மத சம்பந்தமான காரணத்தால் கூறுவனவற்றை விட்டு மற்ற விஷயங்களை மட்டும் பின்பற்றுவதென்று தீர்மானித்தேன். பாலை விட்டு விடுவது மத சம்பந்த [illegible] கத்தா இடையர்கள் பால் [illegible]க்கும் போது எவ்வளவு பாலையும் பிழிந்து விடுகிறார்கள் என்னும் கோரத்தை நான் அறிவேனாகலின் அக் காட்சியே என் முன் தோன்றியது. மேலும் மாமிசம் எப்படி மனிதனுக்கேற்ற ஆகார மாகாதோ அவ்வாறே மிருகத்தின் பாலும் ஆகாரமாக இருக்கக் கூடாதென்பதே என் அபிப்பிராயம். எனவே நான் பாலை மட்டும் உட்கொள்வதில்லை என்னும் தீர்மானத்துடன் மறு நாள் எழுந்தேன். ஒரு வித முடிவுக்கு வந்து விட்டபடியால் நான் கவலையின்றி இருந்தேன். கோகலேயிடம் செல்லவோ எனக்கு அச்சம். ஆனால் என் தீர்மானத்தை அவர் மதிப்பாரென்பது எனக்கு நிச்சயம்.

அன்று மாலை நானும் ஸ்ரீ. காலன் பாக்கும், நாஷனல் பயால் கிளப்பில் கோகலேயைச் சந்தித்துப் பேசினோம். அவர் என்னைப் பார்த்து "நீங்கள் டாக்டரின் சொல்லைப் பின் பற்றுவதென்று தீர்மானித்து விட்டீர்களா ?" என்று கேட்டார்.

நான் "நான் ஒரு விஷயம் தவிர மற்றவைகளைப் பின்பற்ற நிச்சயித்து விட்டேன். எனவே அந்த ஒன்றைப் பற்றி மட்டும் தாங்கள் வற்புறுத்தக் கூடாதென்று கேட்டுக் கொள்ளுகிறேன். நான் பாலையோ, பாலினால் உண்டாகும் பொருள்களையோ, மாமிசத்தையோ உண்ண மாட்டேன். அவைகளைச் சாப்பிடாததாலேயே என் உயிர் போய் விடுமென்று கூறினலும் அதையும் ஏற்றுக் கொள்ளச் சித்தமாக இருக்கிறேன்" என்று உறுதியுடனும் நிதானமாகவும் பதில் கூறினேன்.

"இது தான் உங்களுடைய இறுதியான தீர்ப்பா" என்று கோகலே கேட்டார். "வேறு விதமாக முடிவு செய்ய என்னால் முடியாதென்று நினைக்கிறேன். என் இத்தகைய தீர்மானம் தங்களுக்கு மனக் கஷ்டத்தைத் தருமென்று நான் அறிவேனாயினும் அதைப் பற்றி வற்புறுத்தாமலிருக்கும்படியும், என்னை மன்னிக்கும்படியும் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று நான் விடை தந்தேன்.

### கோகலே இந்தியா திரும்பியது.

கோகலே மன வருத்தத்துடனும், ஆனால் ஆழ்ந்த அன்புடனும், "நான் உங்களுடைய தீர்மானத்தை ஒப்பவில்லை. இதில் மதக் கொள்கை ஏதேனுமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஆயினும் நான் இனி உங்களை வற்புறுத்தப் போவதில்லை" என்று கூறினர். இவ் வார்த்தைகளைக் கூறிக் கொண்டே அவர் டாக்டர் ஜீவ ராஜ மேத்தாவின் பக்கம் திரும்பி, "தயவு செய்து அவரை வற்புறுத்தாதீர். அவர் ஒப்பும் வகையில் எதையேனும் சாப்பிடச் சொல்லி சிகிச்சை செய்யுங்கள்" என்று சொன்னர்.

டாக்டர் விதி யில்லாமல் இதை ஒப்புக் சொள்ள நேரிட்டது. அவர் என்னை சிறிது பெருங் காயத்துடன் கலந்து ஒரு வகை கஷாயத்தை உட்கொள்ளும்படி கூறினர். இதற்கு நான் ஒப்பினேன். இதை நான் ஒன்றிரண்டு தினங்கள் உட் கொண்டதால் என் வலி அதிகமாயிற்று. எனவே அது எனக்கு ஏற்றதாக இல்லாமலிருந்தபடியால் நான் பழையபடி பழங்களையும், கொட்டைகளையும் சாப்பிட ஆரம்பித்தேன். டாக்டர் மேலுக்கு மட்டும் மருந்து கொடுத்து வந்தார். அவ்வாறு சிகிச்சை செய்ததும் எனக்குச் சிறிது சௌக்கியத்தையே தந்தது. ஆனால் என் பிடிவாதத்தால் டாக்டர் கொஞ்சம் கஷ்டப் பட்டார் என்பது நிச்சயம்.

இதற்கிடையில் லண்டனில் அக்டோபர் மாதத்தில் தோன்றும் பனிக் கட்டிகளின் கொடுமைகளைத் தாங்க முடியாமல் ஸ்ரீ. கோகலே இந்தியாவுக்குத் திரும்பி விட்டார்.

## தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரஹம்.

மகாத்மா காந்தி எழுதியது.

### ஐந்தாம் அத்தியாயம்.

### டிரான்ஸ்வாலிலும் மற்றக் காலனிகளிலும் இந்தியரின் குறைகள்.

நேட்டாலைப் போலவே மற்றக் காலனிகளிலும் 1880-ம் வருஷத்துக்கு முன்பாகவே இந்தியருக்கு விரோதமான உணர்ச்சி ஏற்பட்டுவிட்டது. கேப்காலனி ஒன்றைத் தவிர மற்ற எல்லாக் காலனிகளிலும், இந்தியர்கள் தொழிலாளிகளாயிருக்கும் வரையில் நல்லவர்களே என்னும் அபிப்பிராயம் இருந்து வந்தது. ஆனால் சுதந்திர இந்தியர்கள் குடியேறுதல் தென்னாப்பிரிக்காவுக்கு முற்றும் பிரதிகூலமே என்பது வெள்ளைக்காரர் பலருக்கு உறுதிப்பட்டு அக்கொள்கை ஒரு சூத்திரமே யாகி விட்டது. டிரான்ஸ்வாலில் அப்போது இருந்தது குடியரசு. குடியரசு அக்கிராசனாதிபதியின் முன்பு இந்தியர்கள் தாங்கள் பிரிட்டிஷ் குடிகள் என்று சொல்லிக்கொள்ளுதல் நகைப்புக்கிடமாகவே முடியும். அவர்களுக்குக் குறை ஏதேனும் இருப்பின், அவர்கள் செய்யக் கூடியது பிரிட்டோரியாவிலிருந்த பிரிட்டிஷ் ஏஜெண்டின் கவனத்துக்கு அதைக்கொண்டு வருவதைத் தவிர வேறில்லை. இதிலே ஆச்சரியமென்னவென்றால் டிரான்ஸ்வால் சுதந்திரமாயிருந்த போது ஏஜெண்டின் மூலம் கிடைத்த உதவி கூட, அது பிரிட்டிஷ் கொடியின் கீழ்வந்த பின்னர் இந்தியர்கள் எதிர்பார்ப்பதற்கில்லாமல் போயிற்று. லார்டு மார்லி இந்திய மந்திரி பதவி வகித்த காலத்தில், இந்தியர்களின் சார்பாக ஒரு பிரதிநிதிக்கூட்டம் அவரைக் காணச் சென்றது. லார்டு மார்லி, சுயாட்சி பெற்ற குடியேற்ற நாடுகள் மீது ஏகாதிபத்திய அரசாங்கம் அதிகாரம் எதுவும் செலுத்த முடியாதென்பது உங்களுக்கே தெரியுமே என்னுங் கருத்துப்பட விடையிறுத்தார். ஏகாதிபத்திய அரசாங்கம் அந்நாடுகளை வேண்டிக் கொள்ளலாம்; வாதமிடலாம்; தங்கள் கொள்கையை நிறைவேற்றும்படி வலியுறுத்தலாம்; ஆனால் அவற்றிற்குக் கட்டளையிட மட்டும் முடியாது. பார்க்கப்போனால், தங்கள் சொந்தக் குடியேற்ற நாட்டு ஜனங்களின் விஷயத்தில் காட்டிலும், அன்னிய அரசாங்கங்கள் விஷயத்தில் அவர்கள் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தி நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். போயர் குடியரசுடன் அவர்கள் வாதிட்டது இதற்கு உதாரணமாகும். தாய் நாட்டுக்கும், குடியேற்ற நாடுகளுக்குமிருந்த உறவு, பட்டு நூலிலான தளையை ஒத்திருந்தது. சிறிது விகுவானாலும் அந்நூல் பட்டென்று அறுந்துவிடும். இவ்வாறு பலாத்காரத்தினால் காரியத்தைச் சாதித்துக்கொள்ளுதல் நடவாததொன்றாதலின், சமரசப் பேச்சுகளின் மூலம் தம்மால் கூடிய அளவு செய்வதாக மார்லி பிரதிநிதிக் கூட்டத்துக்கு வாக்களித்தார். டிரான்ஸ்வால்மீது யுத்தம் தொடங்கப்பட்டபோது, லார்டு லாண்ட்ஸோன், லார்டு ஸெல்போர்ன் முதலிய பிரிட்டிஷ் இராஜ தந்திரிகள் மேற்படி தென்னாப்பிரிக்கா குடியரசு இந்தியர்களை மிகவும் வெட்கக்கேடான முறையில் நடத்தியது யுத்தத்திற்கு ஒரு காரணம் என்பதாக அறிவித்தார்கள்.

இந்தியர்கள் நடத்தப்பட்ட மேற்படி முறை எத்தகையதென்று இனிப் பார்ப்போம். இந்தியர்கள் டிரான்ஸ்வாலுக்குள் முதன் முதலாக 1881ல் பிரவேசித்தார்கள். காலஞ்சென்ற சேத் அபுபக்கர் பிரிட்டோரியாவில் ஒரு கடை வைத்தார். அதனுடைய முக்கிய தெரு ஒன்றில் நிலமும் [illegible]ந்து மற்ற வியாபாரிகளும் வந்தார்கள். அவர்களுடைய பெரும் வெற்றியானது வெள்ளைக்கார வியாபாரிகளின் பொறாமையைக் கிளப்பிற்று. அவர்கள் பத்திரிகைகளில் இந்தியர்களுக்கு விரோதமான கிளர்ச்சியைத் தொடங்கினார்கள். இந்தியர்கள் நாட்டைவிட்டுத் துரத்தப்பட வேண்டுமென்றும், அவர்கள் வியாபாரத்தைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றும் அவர்கள் வோக்ஸ்ராட் என்னும் டிரான்ஸ்வால் பார்லிமெண்டுக்கு மனுக்கள் அனுப்பினார்கள். வெள்ளைக்காரர்கள் புதிதாய்க் குடியேறிய அந்த தேசத்தில் அவர்களுக்கிருந்த பொருளாசைக்குக் கணக்கே இல்லை. ஒழுக்க விதிகள் என்பவை அநேகமாக அவர்களுக்குத் தெரியாவென்று சொல்லிவிடலாம். அவர்கள் தங்கள் மனுக்களில் எழுதியவற்றுள் சில வாக்கியங்கள் வருமாறு:—"இந்தியர்களுக்கு மனிதப் பிறவிக்குரிய யுக்தா யுக்த உணர்ச்சி கிடையாது. அவர்கள் அசங்கியமான நோய்களினால் பீடிக்கப்பட்டவர்கள். அவர்கள் ஒவ்வொரு ஸ்திரீயையும் தங்கள் காமத்துக்குரியவளாகக் கருதுகிறார்கள். பெண்களுக்கு ஆன்மா கிடையாதென்பது அவர்கள் நம்பிக்கை." இந்த நான்கு வாக்கியங்களிலும் நான்கு பொய்கள் இருக்கின்றன. இத்தகைய உதாரணங்களை அடுக்கிக்கொண்டே போதல் எளிது. வெள்ளைக்காரர் எப்படியோ அப்படியே அவர்கள் பிரதிநிதிகளும் இருந்தார்கள். இந்திய வியாபாரிகளுக்கோ, அவர்களுக்கு விரோதமாக, எத்தகைய அநீதியான, நிய கிளர்ச்சி நடந்து வருகிறதென்பதைப் பற்றி ஒன்றுமே தெரியாது. அவர்கள் பத்திரிகை படிப்பதில்லை. பத்திரிகைக் கிளர்ச்சியும், மனுக்களும் விரும்பிய பயன் அளித்தன.

டிரான்ஸ்வால் பார்லிமெண்டில் ஒரு மசோதா கொண்டுவரப்பட்டது. நிலைமை எப்படி உருக்கொண்டிருக்கிறது என்பதை இந்தியப் பிரமுகர்கள் அறிந்தபோது திகைத்துப் போனார்கள். அவர்கள் அக்கிராசனர் குருகரைக் காணச் சென்றனர். அவர் அவர்களை தமது வீட்டிற்குள் விடவும் மனங் கொள்ளாமல் வாயில் முற்றத்தில் நிறுத்தி வைத்தார். சிறிது நேரம் அவர்கள் கூறியவற்றைக் கேட்ட பின்னர் அவர் சொன்னதாவது:—"நீங்கள் இஸ்மேலின் சந்ததிகள். ஆதலின் பிறந்ததிலிருந்தே ஈஸாவின் சந்ததிகளுக்கு அடிமை பூண்டு தொண்டுசெய்யக் கடமைப்பட்டவர்கள். ஈஸாவின் வழித்தோன்றியவர்களான நாங்கள் உங்களுக்கு எங்களுடன் சமத்துவமான உரிமைகளை அளிக்கமுடியாது. நாங்கள் அளிக்கும் உரிமைகளுடன் நீங்கள் திருப்தியடைந்திருக்க வேண்டும்." அக்கிராசனர் குருகர் இத்தகைய விடையைக் கோபத்தினலோ துவேஷத்தினலோ தூண்டப்பட்டு கூறினர் என்று சொல்ல முடியாது. அவர் தமது குழந்தைப் பருவந் தொடங்கிய பைபிள் பழைய ஏற்பாட்டிலுள்ள கதைகள் கற்பிக்கப்பட்டிருந்தார். அக்கதைகளை அவர் உண்மையென்று நம்பினர். தன் அபிப்பிராயம் எதுவாயிருப்பினும் அதை ஒளியாது உள்ளது உள்ளபடி கூறும் மனிதனை நாம் எவ்வாறு குறை சொல்வது ? எனினும் அறியாமை, கபடின்மையுடன் சேர்ந்துள்ள போதும் தீமை விளையாமற் போகாது. 1885-ல் ஆயிரக்கணக்கான இந்தியர்கள் டிரான்ஸ்வாலுக்குள் நுழையத் தயாராய்க் காத்திருந்தது போல், அவசரமாகப் பார்லிமெண்டில் ஒரு கடுமையான சட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்தியத் தலைவர்களின் வற்புறுத்தலினால் பிரிட்டிஷ் ஏஜெண்ட் இவ்விஷயத்தில் தலையிட வேண்டியிருந்தது.

(தொடர்ச்சி 7-ம் பக்கம் பார்க்க.)

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## பெற்றோர்களின் கொடுமையும், வாலிபர்களின் அடிமையும்.

### கலியாணம் செய்விப்பது கடமைக்காகவா அல்லது கடனுக்காகவா?

(நாதன் எழுதுவது)

பெற்றோர்கள் அருமையாய்ப் பெற்று எடுத்து அன்புடன் பாராட்டிச் சீராட்டி வளர்த்துப் பின் வாலிபமாகிய தங்கள் பிள்ளைகளுக்குக் கலியாணஞ் செய்விப்பது, கடனுக்காகவா அல்லது கடமைக்காகவா; கலியாணம் என்பது என்ன; அது எதற்காகச் செய்யப்படுகிறது; அதில் பெற்றோர்களுக்குள்ள பொறுப்பு கடனை உத்தேசித்தா; அல்லது கடமையை உத்தேசித்தா வென்று பெற்றோர்களே சற்று உற்று நோக்கல் வேண்டும்.

பெற்றோர்கள் உண்மையில் தங்கள் பிள்ளையின் நலத்தையும், விருத்தியையும் நாடிக் கலியாணஞ் செய்விப்பார்களானால், அக் கலியாணத்தாலாய பலனை தங்கள் அருமைப் புதல்வன் அனுபவிக்கிறனா வென்று கவனிக்க வேண்டும். இதுவே பெற்றோர்களின் உண்மையான பொறுப்பு. இதுவே அவர்களின் கடமையாகும்.

அப்படிக் கின்றி உலகத்தாரின் வசைச்சொற்களுக் கஞ்சியோ, வழக்கம்! வழக்கம்!! என்ற பழக்கத்தை அனுசரித்தோ, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இருபதோ, இருப்பத்தைந்தோ வயதாவதற்குள் கலியாணம் செய்து வைத்து விட வேண்டு மென்று மட்டும் கருதுவது கடனைக் கழிப்பதற்கு ஒப்பாகும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குக் கலியாணஞ் செய்து வைப்பதின் உண்மையான நோக்கத்தை உணராமலும், அதில் தங்களுக்குள்ள கடமையைக் கவனியாமலிருப்பதாலுமே பின்னால் அது பெற்றோர்களின் கொடுமையாகவும், வாலிபர்களின் அடிமை வாழ்க்கையாகவும் மாறி விடுகிறது. கலியாணமாவதற்கு முன்னால் ஒருவன் தன் வீட்டாராகிய தாய், தந்தை, அண்ணன், தம்பி, அக்காள், தங்கை முதலியவர்களிடத்தில் நடந்து கொண்டது போல் கலியாணம் ஆகிய பின்பும் நடந்து கொள்வானானால் குடும்பத்தில் விபரீதமும், விபகாரமும், வீண் வழக்கும், குட்டிக் கலகங்களும், மனக் கசப்பும், ஒற்றுமை யின்மையும், நம்பிக்கை யின்மையுமாகி விடுகின்றன. ஆனால் சில குடும்பங்களில், இத்தகைய போக்கு முற்றி, தெருக் காட்சிக்கேற்ற சண்டை சச்சரவாகிப் பின் வாய்ப் பேச்சுக் கைப் பேச்சில் வந்து முடிகிறது.

கலியாண மாவதற்கு முன்னால் தங்கள் மகன், எத்தகைய குற்றத்தையும், கஷ்ட நஷ்டத்தையும் விளைவித்து விட்டாலும் அதைச் சகித்துக் கொண்டு, மன்னித்து, ஆறுதல் அடைந்து கொள்ளும் சுபாவமுள்ளவர்களாக பெற்றோர்கள் இருந்தாலும், மகனுக்குக் கலியாணமாகி விட்ட பின்பு, அவன் ஒரு அற்பக் குற்றம் செய்வானாகில், அதற்கு மன்னிப்பே கிடையாது. அதைப் பொறுத்துக் கொள்ளுவதற்குப் பதிலாக அவனைப் பொறாமையோடு நடத்த ஆரம்பிக்கிறார்கள். பாவம்! இப்போது மகன் செய்து விட்டது என்ன? ஒன்று மில்லை. இவன் கலியாணம் செய்து கொண்டது தான் குற்றவாளியெனத் தோற்றச் செய்கிறது. பிள்ளை கலியாணமாவதற்கு முன்னால் தங்களுக்குக் கட்டுப் பட்டிருந்தது போலவும், கலியாணம் செய்த பின் அவன் மாறி தன் தாரத்தின் வழி பற்றி அவளுக்குக் கட்டுப்பட்டு தங்களைப் புறக்கணித்துக் கொண்டிருப்பது போலவும் வீண் பிரமை கொண்டு பெற்றோர்கள், தங்கள் மனோ நிலையை மாற்றி மயங்குகிறார்கள். புதல்வன் உண்மையில் உயர்ந்த தன்மையில் நடந்து கொண்டு வந்தாலும், தாய்

## பூதக் கலம்.

நாடார் கலியாணங்களில் தொன்று தொட்டு அநுசரிக்கப்பட்டு வரும் பல வழக்கங்களுள் இதுவும் ஒன்றாம். வேறு ஜாதியாரும் இதைச் செய்து வருகிறார்களோ என்று நாம் தெரிந்து கொள்ளக்கூட வில்லை. தென்னாட்டு நாடார்களுக்குள் இது சாதாரண வழக்கம் என்பது நாம் அறிந்த விஷயம்.

ஐரோப்பிய வழக்க பழக்கங்கள் பரவிய இடங்களிலுள்ளாருக்கு இது என்ன என்று தெரியாதிருக்கலாமாதலின் அன்னார் அறிந்துகொள்ளும் படி இரண்டொரு வார்த்தைகளில் இதை விளக்குவோம். திருமங்கிலியச் சடங்கை நடத்துவதற்காகத் தன் வீடு விட்டுப் பெண்வீட்டை நாடிச் செல்லும் மாப்பிள்ளை, தனித்துப் போகார். அவருடன் சமார் ஏக பிராயத்தவரும், அண்ணன், தம்பி என்ற முறையிலுள்ளாருமான பலர் சூழ்ந்து செல்வார்கள். இப்படிக் கூடிவரும் ஆண்மக்களுக்குப் பெண் வீட்டார் விசேஷ மரியாதை செய்வார்கள். மங்கிலியதாரண மானபின் நடக்கும் விருந்தில் இவர்கள் மாப்பிள்ளையுடன் உட்கார்ந்து புசிப்பார்கள். விருந்தில் வழங்கப்படும் பதார்த்தங்களில் முதன்மையானவை இவர்களுக்குப் படைக்கப்படும். இப்படி இவர்களுக்குப் படைக்கப்படும் விருந்தே பூதக்கலமாம்.

இந்த விபரீதமான பேரின் கருத்தென்னவென்று நாம் சில காலத்திற்கு முன் ஓர் முதியாரை வினவ, அவர் ஆதியில் சிவபிரான் தடாதகைப் பிராட்டியாரை விவாகம் செய்ய வருங்காலத்தில் பூதகணங்கள் சகிதம் வந்ததையும், அப் பூதங்களுக்கு மதுரையில் விருந்திடப் பட்டதையும் ஞாபகம் செய்து, நாடார் குல மாப்பிள்ளை சிவபிரானைக் குறிப்பிடுபவராகவும் அவரது தோழர்கள் பூதங்களுக்கு அடையாளமாகவும் பாவித்து இன்றளவும் நடந்துவருகிறது என்பதினுரைத்தார்.

இதைக் குறித்து வேறு தாற்பரியங்களிருப்பின் அதை அறிந்தார் தெரிவித்தல் நலமாகும்.

மௌலி.

---

தந்தையர்களின் வீண் சந்தேகமும், விபரீத எண்ணமும் 'நாளா விருத்தியில் அவனை அவ் வழிக்கே இழுத்து, எதிர்த்து நிற்கும் பான்மைக்குக் கொண்டு வந்து விடுகிறது. கலியாணம் செய்த பின், பிள்ளை தங்களுக்குச் செய்ய வேண்டிய மரியாதை, வணக்கம் முதலியவைகளிலும், தங்களிடத்தில்நடந்து கொள்ள வேண்டிய முறைகளிலும் இம்மியும் தவறாமல் நடக்கிறனா வென்று கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக் கொண்டு குற்றம் கண்டு பிடிப்பதையே, ஒரு பிரதான வேலையாக வைத்துக் கொள்ளுகிறார்கள். யாதாவது ஒரு குற்றம் செய்து விட்டால் "பெண் சாதிசொற்கேட்டுச் செய்கிறன்" என்றுவாய்கூசாது சொல்லுகிறார்கள். அந்தோ! பரிதாபம்!! வாலிபர்களின் கதிக்கு இரங்குகின்றோம்.

கவலையே இன்ன தென்று அறியாத வாலிபர்களுக்குக் கலியாணத்தைச் செய்து வைத்து, தங்களுக்கும் விரோதமாகும் மார்க்கத்தைத் தேடிக் கொள்ளும் பெற்றோர்கள் "பெண் சாதி சொற் கேட்கிறன்" என்று பறை யடித்துப் பிள்ளை மேல் பழி சுமத்தும் கொடுமைக்கு என் செய்வது? பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு மிக்கப் பொறுப்புடன் நிறைவேற்றி வைக்க வேண்டிய கலியாண காரியத்தைக் கடமையாகக் கொள்ளாமல் கடனாகக் கொண்டதே இதற்குக் காரண மாகும்.

(தொடரும்.)

---

பெற்றோர்

அறிவு பெற்றோராயின் பிள்ளைக் கொரு தொல்லையு மில்லை,

## ராயல் கமிஷனிடம் முறையீடுகள்.

### மதுரை.

ராயல் கமிஷன் 5-3-28-ல் மதுரை விஜயம் செய்தபோது, மதுரைமாநகர் பிராமணரல்லாதார் ஜனுப் கே. எம். அலாவுதீன் இராவுத்தர் அவர்கள் தலைமையின் கீழ் கூடி ராயல் கமிஷனை முழுமனதுடன் வரவேற்று கமிஷன் காரிய சித்திபெற வேண்டுமென்று வாழ்த்தி முறையீடு செய்துகொண்டதில் முக்கியமானவை பின் வருமாறு:

1. தென்னிந்தியாவில் ஜன சமுகங்கள் பற்பல பாகுபாடுள்ளவர்களாக இருந்து அவர்களுக்குள் உள்ள வித்தியாசங்களை நாளுக்கு நாள் பெருக்கிக் கொண்டுவருவதுடன் ஒன்று சேர்க்க முடியாத தாயிருக்கிறது. ஆகையினால் ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் தனித் தனி வாக்காளர் தொகுதி இருக்க வேண்டும். ஸ்தானங்களை எவ்வளவு பாதுகாத்தாலும் (ரிஸர்வ் செய்தாலும்) போதாது.

மகம்மதியர்கள், கிறிஸ்தவர்கள், ஜாதி இந்துக்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர் ஒவ்வொரு வகுப்பினருக்கும் தனித்தனி வாக்காளர் தொகுதி வேண்டும்.

ஜனத்தொகை ஈவுப்படி ஸ்தானங்களைப் பிரித்துக் கொடுக்கப் படல் வேண்டும்.

2. ஒரு தொகுதிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் தேர்ந்தெடுப்பது கூடாது. தேர்ந்தெடுப்பவர் தொகுதி கூடிய மட்டிலும் சிறிதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரே யொரு பிரதிநிதி தான் தேர்ந்தெடுக்கப் பட வேண்டும்.

3. வாக்காளர் உரிமையை கூடுமான வரையில் அதிகப்படுத்த வேண்டும். அதிலும் வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்காளர் உரிமை கொடுத்தல் நலமாயிருக்கும்.

4. தற்காலத்தில் சர்க்கார் உத்தியோகங்கள் பூராவையும் மேல் ஜாதிக்காரர்களே அதிலும் முக்கியமாக பிராமணர்களே ஏகபோகமாய் அனுபவித்து வருகிறார்கள். ஜனங்களுடைய சுதந்திரங்களைப் பாது காப்பதற்கு உத்தியோகங்களை வகுப்புவாரி பிரதிநிதித்துவம் செய்ய வேண்டுவது இன்றியமையாததா யிருக்கிறது.

உத்தியோகங்களுக்குப் போட்டி பரீக்ஷை மாத்திரம் வைத்துத்தேர்ந்தெடுத்தல் கூடாது.

உத்தியோகஸ்தர்கள் கெட்டிக் காரராய் இருத்தல் மட்டும் போதாது. ஜனங்கள் ஆதரவைப் பெற்றவர்களாயிருக்கவேண்டும்.

5. எந்த விஷயத்திலும் மத சம்பந்தமென்று சொல்லிவிட்டால் சர்க்கார் பிரவேசிப்பதில்லையென்ற திட்டத்தை விட்டுவிட வேண்டும். சமுக முன்னேற்றத்திற்கு வேண்டிய சட்டங்களைத் தயார் செய்து அவைகளை அமுலுக்கு கொண்டுவரவேண்டும். என்ன வந்தாலும் சண்டை சச்சரவில்லாமல் பார்த்துக் கொள்கிறோமென்று சொல்லிக்கொண்டு அரசாங்கத்தார் சமுக முன்னேற்ற விஷயங்களில் தலையிடாமலும் கொடுமைக்காரர்களுடைய அக்கிரமங்களைத் தடுக்காமலுமிருத்தல் கூடாது. அற்ப சண்டை சச்சரவு ஏற்பட்டாலும் அதைப் பொருட்டாகக்கவனியாமல் நியாயமான விஷயத்துக்கு ஆதரவளிக்க வேண்டும்.

6. வகுப்புவாத சச்சரவுகள் ஏற்பட்டால் சாதாரண நீதிஸ்தலங்கள் ஒரு வகுப்பை சார்க்கூடியதாயிருப்பதால் அந்த விவாதிக்க விசேஷ நீதிஸ்தலங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

7. மாகாண கவர்ன்மெண்டார் சட்ட சபைக்கு ஜவாப்தாரியாயிருக்க வேண்டும்.

ஃ ஃ ஃ

### உசிலம் பட்டி.

உசிலம்பட்டியில் ராயல் கமிஷன் 6-3-28 ல் விஜயமான பேர்து கள்ளர் ஸ்பெஷல் ஆபீஸர். திரு. ஜனார்த்தனராவ் அவர்களும் தாலுகாபோர்டு பிரஸிடெண்ட் திரு. வேதநாயகத் தேவர் அவர்களும் யூனியன் போர்டு பிரஸிடெண்டு திரு. வாளர் முதலாளி ப. வீ. ஆதி முத்து மாலை நாடாரவர்களும் மற்றும் பல பிரமுகர்களும் விசேஷ வைபவத்துடன் வரவேற்பு செய்து கமிஷன் வெற்றிக்கு வாழ்த்தினர்கள். சுற்றுக் கிராமத்தார்கள் அநேகர் வந்திருந்தனர். அவ்வமயம்கள்ளர் மகாஜனங்கள் செய்துகொண்ட முறையீடாவது:—

1. கள்ளர் ஸ்பெஷல் டிபார்ட்மெண்ட் இன்னும் 25 வருஷத்திற்கு இருக்கவேண்டும். 2. நீர்பாசன வசதி செய்து கொடுக்கவேண்டும்.

குறிப்பு:—கள்ளர் மகாஜனங்கள் செய்துகொண்ட இம்முறையீடு சமீபத்தில் நடந்த சென்னை சட்டசபைக் கூட்டத்தில் கள்ளர் குலப் பிரதிநிதி கள்ளர் ஸ்பெஷல் டிபார்ட்மெண்டை யெடுத்துவிட வேணுமாய்த் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியிருப்பதற்கு முரணாயிருக்கிறதென ஷையூர் ஸ்ரீ ஏ. எஸ். பொன்னையாசாமி அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

## திருத்தம்.

சென்ற வாரம் வெளியிடான் மித்திரனின் 5ம் பக்கத்திலுள்ள "அருப்புக்கோட்டை ஸ்ரீமான் மு. மு. முத்துச்சாமி நாடார் வாசகசாலை 7-ம் ஆண்டு நிறைவுவிழா" விஷயத்தின் முதற்பாராவில் 5-வது வரியில் 5-4-28 என்றிருப்பதை 5-3-28 என்றும், 20-வது வரியில் காரியதரிசிகளை என்றிருப்பதை காரியதரிசிகளை என்றும் திருத்திக்கொள்ளவேண்டுகின்றனம்.

---

## மரணம்.

நாடார்குலாபிமானியும், தாலுகாபோர்டு மெம்பரும், தூத்துக்குடியில் பிரபல வியாபாரியுமான மார்த்தாண்டம்பட்டி ஸ்ரீமான் வயி. காசிச்சாமி நாடாரவர்களின் அன்புடை வாழ்க்கைத் துணைவியார் ஸ்ரீமதி பெத்தம்மாளவர்கள் தூத்துக்குடியில் சென்ற மாசிமீ 27உ இரவு 2-மணிக்கு சிவலோகபதவி யடைந்து விட்டனர் எனத் தகவல் கிடைத்திருக்கிறது.

குறிப்பு:—இவ்வம்மையார் மரணங் குறித்து யாம் விசனிப்பதோடு அவர் ஆன்மாசாந்தியடையவும் அவர் பிரிவாற்றாமையால் வருந்தும் அவர் குடும்பத்தினருக்கு ஆறுதலளிக்கவும் இறைவனை இறைஞ்சுகின்றோம். (ப—ர்.)

---

## போட்டோ ஆல்பம் புத்தகம்.

பள்ளியறைக்கான அழகிய பாரிஸ் மாதரின் லீலாவினோத உயர்ந்தஉண்மை போட்டோக்களடங்கிய ஆல்பம்புத்தகம் 1-க்கு 6 அணு. தபால்முத்திரை அனுப்பிப்பெறலாம்.

விலாசம்:—

தாராமதி அண்டு கம்பேனி,

ராயபேட்டை, சென்னை.

---

ஒருவர் எவ்வளவு விவேகியா யிருப்பினும் ஒரு சமயத்தில் அறிவிலாத்தனச் செய்கைக் காளாகி அவஸ்தைப் படுகிறார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



சாதிகுலம் பிறப்பிறப்புப் பந்தமுத்தி
அருவுருவத் தன்மை நாம

ஏதுமின்றி யெப்பொருட்கு மெவ்விட
த்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்

சோதியைமாத்தா வெளியைமனதவிழ
நிறைவான துரிய வாழ்வைத்

தீதில்பரமம் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

## நாடார்குலமித்திரன்

பிரபவ ௵ பங்குனி ௴ ௭ ௳

## மந்திரியின்
## தடுமாற்றம்.

தஞ்சாவூர் தேவஸ்தானக் கமிட்டியார் சென்ற மாதம் 18-ந் தேதி நடைபெற்ற ஒரு கூட்டத்தில் நாடார்களைத் தேவஸ்தானக் கமிட்டி அங்கத்தவர்களாய் நியமனஞ் செய்வது மத விரோத மென்றும், அவர்கள் கோயிலுக்குள் நுழைவதற்கே உரிமையில்லையா தென்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்துக்கு அனுப்பி யிருப்பதாகத் "திராவிடன்", "தமிழ் நாடு", "குடி அரசு" முதலிய சமூக சீர்திருத்தத் தேசியப் பத்திரிகைகள் மூலமாகத் தெரிய வருகிறது.

இவ்வாறு பட்டப் பகலிலே பசு வென்றும், எருமை யென்றும் பார்வை தெரியாத் தன்மையில் தஞ்சைத் தேவஸ்தானக் கமிட்டியார் செய்த முட்டாள்த் தனமான தீர்மானத்துக்குக் காரணம் மாஜி அபிவிருத்தி மந்திரி கனம். அ ரங் க நா த முதலியார் தடுமாற்ற மென்று தெரிய வருகிறது. அதாவது, நாடார்கள் தேவஸ்தானக் கமிட்டியில் அங்கத்தவர்களா யிருப்பதற்கு அருகதையுடையவர்களா, அன்று? என்று தஞ்சை தேவஸ்தானக் கமிட்டியை அபிப்பிராயங் கேட்டிருந்தாராம். இவர்களிப்படிச் செய்வதற்கு இன்னொரு காரண மிருக்கலா மென்றும் எண்ணுகின்றோம். அதாவது, தஞ்சை ஜில்லா கும்பகோணத்தில் நடந்த நாடார் மகாஜன சங்கம் 11-வது மகா நாட்டிலும், வாலிபர் மகா நாட்டிலும், குருட்டு மதக்கொள்கைகளை உலகம் அறவே அறுத் தெறிய வேண்டு மென்று ஆவல் கொண்டு வருவதற் கேற்ப நாடார்களும் "நாடொப்பன செய்" என்ற முது மொழியைக் கடைப் பிடித்துச் செய்த பல தீர்மானங்கள் வைதிகப் பார்ப்பனர் வாயில் மண் விழுந்ததாக எண்ணி தங்கள் சம்பத்தியைப் பிடித்து இவ்வாறு சூட்சி பண்ணி யிருக்க வேண்டு மென்பதே. சுயராஜ்யக் கட்சிப் பார்ப்பனர் கைப் பிள்ளையாய் அரசாங்க மன்றத்தில் விளையாடும் கனம். ரங்கநாதன் தமது மந்திரி பதவி யந்திய காலத்தில் தஞ்சை ஜில்லா நாடார்களுக்குச் செய்த துரோகத்தின் பலனை அனுபவிப்பா ரென்பதற்கு உதாரணமாகத் தாம் புத்தி மந்திரியால் அரசுக் கௌரவ லார்டு கோஷன் அவரை நீக்கி விட்டா ரென்று சொல்லலா மென்றாலும், நாடார்கள் மனப் புண் ஆறாது ஆறாது. அதனால் அவர் மீதேற்பட்ட வசையும் மாறாது மாறாது. தன்னுடைய நாட்டுச் சனங்களின் தன்மையும், சமூகங்களின் வரலாறுகளை யறியாத மூடத் தெய்வங்களை உயர் பதவிக் கேற்ற ஜனங்கள் ஒத்தாசை செய்வதை நிறுத்தும் வரையும் சுயராஜ்யமும், சுயமரியாதையும் வாராது வாராது.

மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் சில தேவஸ்தானங்களில் நாடார்கள் நெடுங் காலப் பாத்திய வழக்கால் வந்த விபத்தால் தேவஸ்தானங்களில் ஒதுங்கி நிற்கிறார்களென்பதும், இதர இடங்களில் யாதொரு தடையுங் கிடையா தென்பதும் நாடறிந்த விஷயம். தஞ்சை ஜில்லாத் தேவஸ்தானங்களில் நாடார்கள் ஏற்கனவே அங்கத்தவர்களா யிருந்துவந்திருக்கிறார்களென்பதும் ஒருவ ரிருவர் அறிந்த ரகசியமு மல்ல. தேவஸ்தானச் சட்டத்திலுள்ள சில குறைகள் கனம். ரங்கநாதன் ஆட்சியில் நீங்கு மென்று நம்பி யிருந்தோம். நாட்டில் உயர் பதவியிலுள்ளோரால் மனம் வருந்தும் பல சமூகத்தாருடைய குறைக ளெல்லாம் அவருடைய பிரம ஞானம் நிவர்த்தி செய்யு மென்று நம்பி யிருந்தோம். அவர் 9—4—27-ல் அருப்புக்கோட்டைக்கு விஜயஞ் செய்த போது "மு. மு. முத்துச்சாமி நாடார் ஞாபகார்த்த வாசகசாலை" யில் பிரசன்னமா யிருக்குங்கால் அவ் வாசகசாலைத் தலைவர் கனம் சொ. ஆ. சொக்கலிங்க பாண்டியரவர்கள் வரவேற்று தேவஸ்தானச் சட்டத்திலுள்ள மாசு நீக்கப்பட வேண்டு மென்று கேட்டுக் கொள்கையில் சரியானபடி கவனிப்பதாக வாக்களித்திருந்தார். அதற்கு நேர் விரோதமாக அவர் மந்திரி பதவிக்குச் சாவு மணி யடிக்குந் தருவாயில் எறிந்த பாணம் நாடார்கள் மனதில் மட்டு மல்ல, இந் நாட்டார் மனதிலுமே பல மாகத் தைத்திருப்பதாகப் புலப்படுகிறது. ஆயினும், "பார்ப்பானைச் சாமி யென்ற காலமும் போச்சு, வெள்ளைப் பறங்கியைத் துரை யென்ற காலமும் போச்சு, எய்ப்போருக் கேவல் செய்யும் காலமும் போச்சு, எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு" என்றும் "நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்" என்றும் உணர்ச்சியைக் காலச் சக்கரம் மேலாகச் சுழற்றிக் காட்டும் இந்தக் காலத்தில் நாடார்கள் கனம். ரங்கநாதன் கடைசிப் பாணத்திற்குச் சற்றும் பயப்படாமல் அவர் முட்டாள்த் தனத்துக்கே முதலில் வருந்துவார்கள். கடவுள் இவரைத் தண்டித்து விட்டார். சுயராஜ்யக் கட்சியார் அவருக்கு எவ்வளவு பரிந்து பேசிச் சப்பை வைத்துக் கூறினாலும், மந்திரி பதவியிலிருந்து அவர் தள்ளப் பட்டே போனா ரென்பதில் சந்தேக மில்லை.

இனி, வந்திருக்கும் புது மந்திரிகளும் அவர் சென்ற வழியே செல்லுவோம் என்று பிரமாணம் பண்ணி விடாமல் நாட்டின் நலத்தை யுன்னி, "மந்திரிக் கழகு வரும் பொருளுரைத்தல்" என்பதை எண்ணி ஜனங்களின் அபிலாசங்களை அரசாங்கத்துக்குச் சொல்லி வேண்டியது செய்ய விரும்புகிறோம். முதலாவது கனம். அரங்கநாதன் தஞ்சை ஜில்லா நாடார்கள் மீது விட்ட பாணத்தைத் திருப்பி யழைத்துத் திருப்தி செய்ய வேண்டுகிறோம். இதற்கு முன் பல்லாண்டுகளாகத் தஞ்சை தேவஸ்தானக் கமிட்டியில் நாடார்கள் அங்கத்தினரா யிருந்து வந்திருக்கிறார்கள் என்பதற்கு வேண்டிய சான்றுகள் உண்டு. ஆயினும் இப்போது சட்ட சபையிலுள்ள ஒரு பெரியாரும், இராமநாதபுரம்ராஜாவுமானரவிகுல முத்துவிஜய ரகுநாத பாஸ்கர ராஜ ராஜேஸ்வர கனம். முத்து ராமலிங்க சேதுபதி யவர்கள் சிவகாசியில் நடை பெற்ற நாடார் மகாஜன சங்கம் எட்டாவது மகா நாட்டில் தலைமை வகித்துத் திருவாய் மலர்ந் தருளிய ஐந்தாவது பாராவை மட்டும் கீழே குறிப்பிடுகின்றோம்.

"ஆலயங்களிற் பிரவேசிப்பதானது நான் பார்த்த வளவில் மற்றைய காரணங்களைக் காட்டிலும் வழக்கத்தை அனுசரித்ததா யிருப்பதோடு வெவ்வேறு ஜில்லாக்களில் வேறுபட்டதா யிருக்கிறது. கன்னியாகுமரி, ஜெனார்த்தனம், திருவனந்தபுரம் முதலிய அநேக விடங்களில் மறவர்கள் கோயிலுக்குள் பிரவேசிக்கக் கூடாது. தஞ்சாவூர் ஜில்லாவில் நாடார்களைக் கோவிலுக்குள் போகாது தடுப்பதில்லை. தங்கள் ஜாதியில் மிகச் சிறந்தவரா யிருந்த காலஞ் சென்ற பொன்னுச்சாமி நாடாரவர்கள் கும்பகோணம் தேவஸ்தானக் கமிட்டியில் என்னோடு மெம்பரா யிருந்தார்கள். ஆனதால் கோயிலுக்குள் நாடார்கள் போவதால் தீட்டு ஏற்பட்டு அந்தக் கோயில்களின் கட்டடங்களுக்கு அதனால் ஓர் அசுத்தி யுண்டாகு மென்றால் சமயாச்சாரிகளான நால்வர் முதலியவர்களால் பாடல் பெற்ற தஞ்சை ஜில்லாவிலுள்ள அநேக புராதன ஸ்தலங்களில் அப்படிப் பட்ட தடைகளில்லா திருப்பது பொருத்தமா யில்லை. கடவுளின் பரிசுத்தமானது அந்த ஜில்லாவுக்கு ஒரு விதமாகவும், வேறு ஜில்லாவுக்கு வேறு விதமாகவும் இருக்கக் கூடிய தில்லை. நான் மேற் கூறிய வழுங்கங்களும், பழமையைத் தழுவி நடக்க வேண்டு மென்ற கொள்கையை உடையவர்களின் எண்ணங்களுந் தான் இதற்குக் காரணம்" என்பதாம்.

கனம். ராஜா அவர்களுடன் ஒரு நாடார் தேவஸ்தான அங்கமாயிருந்து வந்தா ரென்றும், கடவுள் சன்னிதானத்தில் வித்தியாச மில்லை யென்றும், மாமூல் வழக்க மென்ற கொள்கையே பாகு பாடுண்டாக்குகிற தென்றும் கனம். ராஜா அவர்கள் 'ளங்கமறக் கூறி யிருப்பதையும், மாமூல் வழக்கம் என்ற பழக்கமே நம் நாட்டை அடிமைப் படுத்தி விட்டது; அம் மூட வழக்கத்தை அடியோடு தொலைத்து விட்டால்த் தான் நாடு க்ஷேமம் அடையும்

## அருப்புக்கோட்டையில்
## டிரைவர்
## வெட்டுண்டார்.

### அபாயமான காயம்.

### மோட்டார் யூனியனால் மூளைத்தகேடு.

(நமது சொந்த நிருபர் எழுதுகிறார்.)

இவ்வருப்புக் கோட்டையிலுள்ள மோட்டார் கார்களெல்லாம் சிறிது காலமாக யூனியனுக்கு சர்வீஸ் நடைபெற்று வந்தது. இந்த யூனியன் கார்களில் இவ்வூர் "ஸ்ரீ முத்துமாரியம்மன் பிரஸ்" காரும் ஒன்றாயிருந்து பின் யூனியனிலுள்ள சில நியாயக்கேடுகளைக்கண்டு யூனியனை விட்டு விலகி தனியே சர்வீஸ் நடத்திவருகிறது. இது தனித்து நிற்பதுபற்றி யூனியன் கார்க்காரர்களில் சிலருக்கு நெஞ்செரிவு உண்டாகி ஏனைய வரையும் தம் வயப்படுத்தி "ஸ்ரீ முத்துமாரியம்மன் பிரஸ்" கார் சம்பந்தப்பட்டவர்கள், அவர்கள் வகையறாக்கள் முதலியவர்களுக்கு யூனியனுக்குட்பட்ட கார்களில் டிக்கெட்டுகள் கொடுப்பதில்லை யென்றும், அவர்கள் சம்பந்தம் எவ்வகைத்தும் வைத்துக்கொள்வதில்லை யென்றும் கட்டுப்பாடு வைத்துக்கொண்டார்கள். இக் கட்டுப்பாட்டின்படி நாலைந்து நாட்கள் சர்வீஸ் நடந்துவந்தது. பின்னர் என்ன யோசித்தார்களோ! கட்டுலைத்து விட்டார்கள். கட்டுலைந்து விட்டதெனினும் நெஞ்செரிவு கொண்ட பேர்வழிகள் "ஸ்ரீ முத்துமாரியம்மன் பிரஸ்" காருக்குப் பலவிதத்தும் இடைஞ்சல் செய்து கொண்டேயிருந்தார்கள்.

"ஸ்ரீ முத்துமாரியம்மன் பிரஸ்" கார் விருதுநகருக்கும் அருப்புக்கோட்டைக்கும் ஓடிக்கொண்டிருப்பதாகும். இதற்கு டிரைவர் மிஸ்டர் அகஸ்தின் என்னும் கிறிஸ்தவ வாலிபர். குடியிருப்பு இவ்வூர்தான்; அவரது குடும்பம் பொதுஜன நன்மதிப்புக்குரியது. இவர் எல்லாருடனும் சமூகமாய் நடை கொள்ளும் சுபாவமுள்ளவர். இவர் என்ன இடைஞ்சல் வரினும் வருக; நியாயத்திற் கழிவில்லை; உண்மைக் குழைப்பதே நீதி; சத்தியமே ஜெயமெனும் உண்மையை அறிவோமெனத் தைரியத்துடன் ஷை காருக்கு டிரைவர் தொழிலை நடத்திவந்தார்.

இவ்வண்ணமிருக்க, விருதுநகரில் டிக்கெட் போடுமிடத்தில் யூனியன் கார்களின் சிப்பந்திகளும் சில பொறாமைச் சித்த முதலாளிகளும் "ஸ்ரீ முத்துமாரியம்மன் பிரஸ்" கார் சிப்பந்திகளுடன் அடிக்கடி சச்சரவு செய்துகொண்டு வந்திருக்கின்றனர். என்ன செய்தாலும் "ஸ்ரீ முத்துமாரியம்மன் பிரஸ்" கார் சிப்பந்திகள் உண்மையுடன் உழைப்பதைக்கண்டு பொறாமைக்காரர்கள் எப்படியும் தம்மை யெரித்துக் கொண்டிருக்கும் நெஞ்செரிவு நீக்க முயற்சித்தார்கள். டிரைவரைக்கொன்றுவிட்டால் "ஸ்ரீ முத்துமாரியம்மன் பிரஸ்" கார் ஓடாமலே நின்றுவிடும் என்று முடிவு கொண்டுவிட்டனர்.

---

என்று சுயமரியாதை இயக்கம் கூறுவதையும் புது மந்திரிகள் கவனித்து

"கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் [செய்யு
மருவினையு மாண்ட தமைச்சு"

"தெரிதலுந் தேர்ந்து செயலு [மொரு தலையாச்
சொல்லும் வல்ல தமைச்சு

என்ற தொட்டாலுங் கை மணக்கும், படித்தாலும் வாய் மணக்குந் தமிழ் வேதத் திருக்குறள் ஆசிரியர் திருவாக்கையும் நோக்கிக் குடிகள் நலன் காத்து கோஷன் பிரபு கோலாட்சி நல்லாட்சியாக கனம். ரங்கநாதனின் தடுமாற்றத் தடை நீக்கி வைப்பார்களென்று நம்புகின்றோம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

தங்கள் பெண்டு பிள்ளைகள் உண்டு சுகிக்க நினைத்தார்களே யொழிய கொலைப்பாவத்தையும் கொலையால் வரும் சர்க்கார் தண்டனையையும் எண்ணினார்களில்லை. இவர்களைக் கெட்ட காலம் பிடித்தது போலும்! கொலை செய்ய ஆலோசனை பண்ணிவிட்டார்கள்.

டிரைவர் மிஸ்டர். அகஸ்டின், என்றைக்கேனும் இக்கொடுமைக்காரர்கள் தன்னைக் கொன்று விடுவார்கள் என்பது கண்ட முறையில் அறிந்து கொண்டாராதலால் வெட்டுண்ட நாளின் (12-3-28) பிற்பகலில் விருதுநகர் போலீஸ் ஸ்டேஷனில் தனக்கு வரவிருக்கும் ஆபத்து குறித்து ரிப்போர்ட் எழுதி வைத்துவிட்டு அருப்புக்கோட்டைக்கு வந்து விட்டார்.

பொறாமைக்காரர்கள் சூழ்ந்து களித்தது; ஆனால் முற்றுப்பெறவில்லை. தெய்வம் நன்று இருக்கிறதல்லவா? விருதுநகரிலிருந்து சிலரைக் கொண்டு வந்து தாமும் துணையாய் நின்று காரியத்தை முடிக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

12-3-28-ல் இரவு சுமார் 1½ மணியிருக்கும். மிஸ்டர். அகஸ்டின் தனக்கு வரும் ஆபத்து எண்ணாமல் "ஸ்ரீ முத்துமாரியம்மன் பிரஸ்" மோட்டார் ஆபீஸ் திண்ணையில் அயர்ந்த நித்திரையிலிருந்திருக்கிறார். விளக்கும் எரிந்துகொண்டிருந்திருக்கிறது. பக்கத்துக்கடைகளிலும், மோட்டார் கார் வீட்டுகளிலும் ஆட்கள் தூங்கிக்கொண்டிருந்திருக்கிறார்கள். பாவிகள் வேலையை ஆரம்பித்தார்கள். முதலில் விளக்கு அணைக்கப்பட்டது. கொலைஞர்கள் எச்சரிக்கையாய் நின்று கொண்டனர். ஐயோ! தலையில் ஓங்கி ஒரு வெட்டுவிழுந்தது. உடனே டிரைவர் அலறி எழுந்திருக்க மார்பில் மறுவெட்டு விழுந்தது. டிரைவரின் கதியென்ன? ரத்தம் பெருகியோட ஸ்மரணையற்று உருண்டு கீழே விழுந்தார். பக்கத்தில் படுத்திருந்தார் அரவம் கேட்டெழுந்தார்கள். பேடிகள் ஓடி விட்டார்கள்.

ஜனங்கள் கூடினார்கள். ஆத்திரப்படாதாராருமில்லை. பெற்றார் பிறந்தார் துக்கம் சொல்லமுடியாது. உடனே சிகிச்சை செய்ய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனார்கள். கனம். சப் இன்ஸ்பெக்டர் தோத்தாத்திரி பிள்ளையவர்கள் முன்னிலையிலும் கனம். சப்மேஜிஸ்ட்ரேட்டவர்கள் முன்னிலையிலும் மரணவாக்கு மூலம் வாங்கப்பட்டதில் எதிரிகள் சுமார் ஆறு ஏழு பேர்களெனத் தெரியவருகிறது. இதுவரையில் வெளியூர்களிலிருந்து மூவர் பிடிபட்டிருக்கின்றனர். மற்றவரையும் பிடிப்பதற்குப் போலீஸார் வெகு சுறுசுறுப்பாய் வேலைசெய்து வருகின்றனர். டிரைவர் தெய்வ கிருபையால் நாளுக்குநாள் சுகமடைந்து வருகிறார். இது பற்றி இன்னும் வரும் செய்தியைப் பின்னும் அறிவிப்போம்.

## மகாத்மா தேக நிலை.

மகாத்மா காந்தியின் தேக நிலை அபாயகரமா யிருப்பதாகப் பத்திரிகைகளில் வெளிவந்திருப்பது உண்மையல்ல. முன்னைவிட இது சமயம் சுகமாகவே யிருக்கிறார். டாக்டர். அன்சாரி பரீக்ஷித்ததில் ரத்தக்கொதிப்பு 149 டிகிரிக்குக் குறைந்திருக்கிறதென்றும், நாடியின் வேகம் 70 இருக்கிறதென்றும் தெரியவருகிறது. தேகத்திலும் 2 பவுண்டு நிறை அதிகமாகவே யிருக்கிறதாம். சௌக்கியமாகவே யிருந்துவருகிறார்.

## புதிய மந்திரிகள்.

மாஜி மந்திரிகள் ஸ்ரீமான்களான ஏ. ரங்கநாத முதலியாரவர்கள், ஆர். ஆரோக்கிய சாமி முதலியாரவர்கள் இவர்களுடைய ஸ்தானங்களில் முறையே ஸ்ரீமான்களான எஸ். முத்தையா முதலியாரவர்களும், யம். ஆர். சேதுரத்தின மய்யரவர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

## பிரயாணம்.

இந்து நம்மித்திரன் அதிபர் தமது வியாபார விஷயமாய் செங்கோட்டைக்குப் புறப்பட்டிருக்கின்றனர்.

## செய்தித் திரட்டு.

ஜப்பானில் பெரும் புயலால் ஐந்து கப்பல்கள் நாசமாயிற்றும். அதனால் 164 பேர்களுக்கு மேல் உயிர்ச் சேதமாயிற்று.

* *

கொழும்பின் தென் கரையிலுள்ள கலுதாரா என்ற விடத்தில் ரயில் விபத்தால் அனேகருக்கு உயிர்ச் சேதமும், சிலருக்குக் காயமும் ஏற்பட்டிருக்கிறது.

* *

மிஸ். மில்லர் சங்கராச்சாரியாரால் இந்து வாகி விட்டார். கோதாவரிக் கரையில் வைதிகச் சடங்குகள் நடைபெற்றன.

* *

பர்ஷியாவில் பூகம்பத்தால் பாதிக் கிராமம் நாசமாய்ப் போய் விட்டது.

* *

ஸைமன் கமிஷனுக்குத் திருநெல்வேலி ஜில்லா ஆதித் திராவிடர்கள் வேண்டுகோள் மகஜர் அனுப்பியுள்ளார்கள்.

* *

திருச்சியிலிருந்து, புதுக்கோட்டைக்கும் அங்கிருந்து காரைக்குடிக்கும் ரயில்வே லயன் போடும் வேலைகள் தீவிரமாய் நடை பெற்று வருகிறது.

* *

அமெரிக்காவில் ஸான் பிரான்ஸிஸ் கோ வென்னுமிடத்தில் பூகம்பம் ஏற்பட்டது. அதனால் நகர வசதிக்காக கட்டப்பட்டிருந்த 400 அடி ஆழமுள்ள ஓர் பெரிய ஜலாசயம் உடைபட்டு ஜலப்பிரவாகம் உண்டாகி 400 பேர் மூழ்கி மாண்டார்கள்.

* *

சென்னை ராயபுரத்தில் ஒரு பெருந் தீ விபத்து ஏற்பட்டு 25 குடிசைகள் நாசமாயின. உயிர்ச் சேதமில்லை. ஒரு குடிசை எரிந்து கொண்டிருக்கையில் ஒரு பூனை தன்குட்டிகளை தைரியத்துடன் வெளியே தூக்கிக்கொண்டு வந்து விட்டது. இது கண்டு எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்.

* *

ஜெர்மனிக்கும் இங்கிலாந்துக்கும் தற்போது இருந்துவரும் வியாபார சம்பந்தம் அதிருப்திகரமாக விருக்கிறதென்றும், இங்கிலாந்து உடன்படிக்கைக்கு மாறாக நடந்து வந்திருக்கிறதெனவும் ஏற்கனவே அபிப்பிராயம் வெளியிட்டிருக்கும் ஜெர்மன் பொருளாதார மந்திரி இப்போதுள்ள உடன்படிக்கையை விரைவில் முடித்துவிட நோட்டீஸ் கொடுக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்.

* *

கல்கத்தாவில் லீல்டா தபால் வண்டியில் ரூ 50,000-0-0 இன்ஷூர் கவர்கள் அடங்கிய பை களவு போய்விட்டது. ரஜாவிலிருந்த அத்வர் ரஹிமான் என்ற தபால் குமஸ்தாவும் இன்னும் இருவரும் கைது செய்யப்பட்டு ரூ 2500-0-0 கைப்பற்றப்பட்டது.

* *

ரங்கூன்—கீமந்தானில் சுலேமான் ஹாஜி பிரதர்ஸ் அண்டு கம்பெனியின் அரிசிமில்லில் பெருந் தீ விபத்து நேரிட்டு 3½ லக்ஷம் ரூபாய் நஷ்டமேற்பட்டு விட்டது.

* *

எல்லூரில் ஒரு பெரிய தீ விபத் தேற்பட்டு ஆயிரக்கணக்கான கூரை வீடுகளும், ஓட்டு வீடுகளும் எரிந்து போயின. மூன்று குழந்தைகளும், இரு ஆண்களும் மாண்டனர். 3000 குடும்பங்கள் வரை வீடின்றித் தவிக்கின்றனர். ஏராளமான ஆடுமாடுகள் தீக்கிரையாயின. கஷ்ட நிவிர்த்திக்காக காந்தி மகான் வித்தியாசாலை மாணவர்களும், ஆசிரியர்களும், சென்னை சட்டசபையங்கத்தினர் ஸ்ரீ மோதி நாராயண ராவ் அவர்களும், ஸ்ரீ குட்டர் வெங்கய்யர், ஸ்ரீ சௌந்தரி முதலிய பிரபல வியாபாரிகளும் வேண்டிய பிரயத்தனம் செய்து வருகிறார்கள்.

* *

லிஸ்பன் நகரத்திற்கு 10 மைல் தூரத்திலுள்ள சிர்ராடிரான்கட் என்ற மலையிடிந்து விழுந்து தந்திமரங்களெல்லாம் சாய்ந்து விழுந்தன. லிஸ்பனுக்கும் பூசில்லாஸ் என்ற விடத்திற்கும் போக்கு வரத்து தடைப்பட்டிருக்கிறது. உயிர்ச் சேதமில்லை.

## தூத்துக்குடி, வர்த்தகக் குமஸ்தாக்கள்.

தூத்துக்குடி, வர்த்தகக் குமஸ்தாக்கள் "முக்கியமாக வியாபார ஸ்தலத்திற்குத் தேவையான வீ கஸ்டம்ஸ் ஆபீஸ், போர்டு ஆபீஸ், தந்தி தபால் ஆபீஸ், ரெயில்வே புக்கிங் ஆபீஸ், பேங்கு ஸ்தலங்கள் ஆகியவைகளும் இன்னும் இதர பெரிய வியாபார ஸ்தலங்களும் ஞாயிற்றுக்கிழமை தோறும் விடுமுறை நாளுள்ளவையாக இருக்கின்றன. அன்று தினம் கூலி யாட்களும் (வண்டி மாடுகளுக்கும் கூட) அலுவல் நின்று ஓய்வு கொள்கின்றார்கள். எங்களுக்குமட்டும் இதுவரை ஷை நாள் விடுமுறை நாளாயில்லாமலிருப்பது எங்கள் துர் அதிஷ்டந்தானெனக்கருதுகின்றோம். எங்களது துர் அதிஷ்டத்தைத் தாங்கள் நிவர்த்தி செய்து கொடுப்பீர்களென்று நினைத்து இவ்விண்ணப்பத்தைத் தெரியப்படுத்துகிறோம். ஆகையால் இவ்விண்ணப்பத்தை மனமுவந்து ஏற்றுக்கொண்டு வேண்டிய ஏற்பாடுகள் செய்து எங்கள் குறையை நிவர்த்திக்கும் பொருட்டு அதிக வணக்கமாய்க்கேட்டுக்கொள்கிறோம்." என்று எழுதி கையொப்பமிட்டு இந்திய வியாபாரச் சங்கத்தில் கொண்டு போய்க் கொடுத்து விட்டார்கள்.

6-3-28-ல் கொடுத்த ஷை மனுவுக்கு 7-3-28-ல் இந்திய வியாபாரச்சங்க செக்ரெட்டேரி மகா-ள-ள-ஸ்ரீ விக்டர் பர்னாந்திஸ் அவர் வர்த்தகக்குமஸ்தாக்கள் கொடுத்தமனுவுக்கு மெம்பர் கையெழுத்து ஒன்றுமில்லை; ஆதலால் தங்கள் மனுவு மீட்டிங்கில் ஆஜர்ப்படுத்தப்படமாட்டாது என்று பதிலெழுதிவிட்டார்கள். மறுபடியும் சில வர்த்தகக் குமஸ்தாக்கள்கூடி எடுத்த காரியத்தை விடக்கூடாதென்று நினைத்து "யாமாகிய வர்த்தகக் குமஸ்தாக்கள் அனுப்பிய மனுவை தயவுசெய்து மீட்டிங்கில் போடும்படி கேட்டுக் கொள்கிறோம்." என்று எழுதி மேற்கண்ட மெம்பர்களிடம் கையெழுத்து வாங்கி மறுபடியும் 8-3-28-ல் சுமார் 5-30 மணிக்கு கொடுத்துவிட்டார்கள். உடனே 8-3-28-ல் நடந்த மெம்பர்கள் மீட்டிங்கில் ஆஜர்ப்படுத்தப்பட்டது.

தூத்துக்குடி வர்த்தகக் குமஸ்தாக்கள் குறையைக் கண்ணால் கண்டு அவர்கள் குறையை நிவர்த்தி செய்து வைக்கலாமென்று இதனடியில் கையொப்பமிட்டிருக்கும் முதலாளிமார்களுக்கு இத்திருமந்திரநகர் (தூத்துக்குடி) வர்த்தகக் குமஸ்தாக்களாகிய நாங்கள் எல்லோரும் "இவர்களே இத்திருமந்திரநகருக்குதேசியத்தலைவர்கள்" என்று நினைத்து இவர்களுக்கு எங்கள் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறோம்.

அவர்களாவர்:—எம். வி. முத்துக்குமாரசாமி பிள்ளை, எ. எஸ். என். நடராஜ நாடார், கச்சி சேட், கே. எஸ். பி. டி. முத்தையாநாடார், வி. டி. வி. தாம்ப் பெருமாள் பிள்ளை, எ. வி. வி., கே. ராமலிங்கம் பிள்ளை, பி. எஸ். ஆர். கூடலிங்க நாடார், எச். பி. எம். சேட், பி. பி. வி. எம்., எ. ஆர். வி. டி., எ. பி. எஸ். கே. பிரமநாயகம் பிள்ளை, ய்ப். எக்ஸ். பி. அன்ஸன்ஸ், என். எ. எஸ். டி. தாயுமானசாமி நாடார், எம். எ. எ. அன் பிரதர்ஸ், வி. என். பி. ஆர். எம்., வி. என். எம். என். எ., எஸ். எஸ். எ. எஸ். தங்கசாமி நாடார், எ. ஆர். எஸ். திருமேனிநாத நாடார், டி. எ. எஸ். எ., பி. டி. என். வி., கே. எல். கந்தசாமி பிள்ளை, எஸ். டி. சிதம்பரம் பிள்ளை, பி. எ. குமாரவேலு நாடார், கே. கே. எ. ஆறுமுக நாடார்.

சிறகு, மகா-ள-ள-ஸ்ரீ வி. டி. வி. தாம்ப்பெருமான் பிள்ளை அவர்கள் தலைமையின் கீழ் 8—3—28-ல் சுமார் 7-15 மணிக்கு இந்திய வியாபாரச் சங்கத்தில் மீட்டிங் நடைபெற்று பத்துப்பதின்மூன்று தீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டன. சில தீர்மானங்களை ஜெனரல் பாடி மீட்டிங்கிற்கு கொண்டு வரும்படி முடிவு செய்யப்பட்டது. பின்னர் அக்கிராசனாதிபதியவர்கள் (புன் சிரிப்பாக) இந்த வர்த்தகக் குமஸ்தாக்களின் மனுவை வாசித்தனர். அதை மகா-ள-ள-ஸ்ரீ பி. எஸ். ஆர். கூடலிங்க நாடார் அவர்கள் ஆமோதித்துப் பேசினார்கள். அதன் பின் மகா-ள-ள-ஸ்ரீ அ. ச. நடராஜ நாடார் அவர்கள் அதை ஆமோதித்தார்கள். அதன் மேல் மகா-ள-ள-ஸ்ரீ எ. எம். என். எம். அவர்கள் ஆமோதிக்க ஒருவரும் இல்லை என்று சொன்னார்கள். அதை மறுத்து அ. ச. நடராஜ நாடார் அவர்கள் தாம் ஆமோதித்திருப்பதாகச் சொன்னார்கள். மகா-ள-ள-ஸ்ரீ ஜான் நாடார் அவர்கள் இந்த மனுவை அவரவர்கள் சொந்தக் கோதாவில் செய்யவேண்டுமே தவிர சேம்பர் வழியாக கொண்டு வரவேண்டாம் என்று சொன்னார்கள்.

பின்னர் மகா-ள-ள-ஸ்ரீ எம். எம். எஸ். எம். துரையப்ப நாடார் அவர்கள் வர்த்தகக் குமஸ்தாக்கள் எல்லோருக்கும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை கொடுத்துவிட்டால் மற்றநாள் விடுமுறை கேளாமல் இருப்பார்களா என்று கேட்டார்கள். கடைசியாக, இந்த மனுவை எல்லா வியாபாரிகளும் வந்து ஒப்புக்கொள்ள வேண்டியதிருப்பதால் இதை ஜெனரல்பாடி மீட்டிங்குக்கு ஆஜர்ப்படுத்தும்படி தீர்மானிக்கப்பட்டது என்று ஸ்ரீமான் எம். நடராஜ பிள்ளை யெழுதுகின்றார்.

ஓய் வில்லா வேலையில் உற்சாக மில்லை. உற்சாக மில்லா வேலையில் ஒழுங்கு பாடில்லை. என வே ஒழுங்குப்பாடுள்ள [illegible]

ஆப்கன் அரசரை லண்டனில் கவர்ன்மெண்டார் வரவேற்று வெகு கண்ணியமான உபசாரஞ் செய்தனர்.

* *

சென்னைக்கவர்னர் நாசரத்துக்கும் பாளையங்கோட்டைக்கும் விஜயம் செய்ய விருந்தது எதிர்பாராத சில அசந்தர்ப்பங்களால் தடைப்பட்டு விட்டது.

* *

பிரிட்டிஷ் கப்பல் படையின் சென்ற வருஷத்திய உத்தேசச் செலவில் 10 லக்ஷம் பவுன் குறைவேற்பட்டிருக்கிறது. அறிக்கையில் மொத்தம் 610 லக்ஷம் பவுன் செலவழிந்திருப்பதாகத் தெரிகிறது. சீன போராட்டத்தால் 140,000 பவுன் அதிகச் செலவு. இவ்வருஷம் உபமான்யம் கேட்கப்படவில்லை.

* *

பிரிட்டிஷ் ஆகாயப்படை 1928-29ம் வருஷத்திய வரவு செலவு திட்டத்தில் 16200,000 பவுன் செலவேற்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற வருஷம் 15550000 பவுன் செலவு தான் எதிர்பார்க்கப்பட்டது. அடுத்த வருஷத்திட்டத்தில் இராக் ஆகாயப்படையில் செலவாகிய20லக்ஷம்பவுன் சேர்க்கப்பட்டிருக்கிறது. 4 படைகள் அதிகமாகச் சேர்க்கப்படும். இவற்றில் 2 இந்தியர் விற்காகும்.

* *

இந்தியா மந்திரியின் சம்பளத்தை ஒரு ரூபாயாக்க வேண்டுமென்று இந்தியா சட்டசபையில் ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியாரவர்களால் தீர்மானங்கொண்டு வரப்பட்டு நிறைவேறிவிட்டது. இந்தியாவிற்குச் செய்யும் நன்மைக்கு இவ்வளவு சம்பளமே போதுமானதாம்.

## மீண்டும் வக்கீலானார்கள்.

மாஜி சென்னை சட்டமெம்பர் ஸர். வி. பி. ராமசாமி அய்யரவர்களும், அவர் பதவியை ஏற்றிருந்த ஸ்ரீமான் டி. ஆர். வெங்கிட்டராம சாஸ்திரியவர்களும் மீண்டும் வக்கீல் தொழில் பூண்டு கொண்டார்கள். 14-3-28ல் ஸர். வி. பி. ராமசாமி அய்யர் சென்னை ஹைக்கோர்ட்டுக்கு வந்தார். அவரும் ஸ்ரீமான் டி. ஆர். வெங்கிட்டராம சாஸ்திரியவர்களும் வக்கீல் சங்கங்களுக்குப் போனார்கள். அங்குள்ளவர்கள் அவர்களைச் சந்தோஷத்துடன் வர[illegible]

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## தன்னலமும், தவறான கட்டுப்பாடும்.

(அருப்புக்கோட்டை ஜீவகாருண்யப் பிரசார சபையின் 19-வது பிரசுரம்)

ஒருவன் நம்மை அவமரியாதை செய்தல், ஏமாற்றுதல், மோசம் செய்தல் முதலான கெட்ட காரியங்களில் எதையாவது செய்தால் ஆத்திரப்படுகிறோம்; கோபிக்கிறோம்; சபிக்கிறோம்; பிறரிடம் தூற்றுகிறோம்; எந்த வழியில் எதிரியை ஒடுக்கலாமென்று யோசிக்கிறோம். கெட்ட காரியம் செய்யக்கூடாதென்று விரும்புகிறவர்கள் மனமும், இது சமயம் எதிரியை மன்னிக்க இடம் கொடாது. எதிரி அடிக்கவந்தால் பணச் செலவையும் பாராமல் படைதிரட்டி எதிர்க்கின்றோம். ஆனால் கொன்றுவிட யோசிக்கிறனென்று, நம் நண்பன் மூலமாகக் கேள்விப்பட்டாலோ, மனம் எங்ஙி கொஞ்சம் துடிப்பது அவரவர்களே யோசித்தும், அனுபவத்திலும் அறிய வேண்டுமே தவிர ஒருவர் சொல்லி அறிய முடியாது. பந்தோபஸ்துக்குத் தோழர்களை அழைக்கிறோம். தற்காலம் நமது புஜ பலத்தை இழந்திருக்கிறபடியால் நமது பலத்தை நம்பாமல் நமக்குக் காட்டியிருக்கும் வழிப்படி போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் வேண்டிய ஏற்பாடு செய்கிறோம். என்ன செய்தாலும் இருதயம் துடிக்கிறது. கைகால்கள் நடுங்குகின்றன. ஏன்? இந்த உலகத்தில் என்ன இருந்தாலும், உயிர்போனால் அப்புறம் எதை அனுபவிக்க முடியும்? சக்கிரவர்த்தியானாலும் உயிர் போனால் அவன் சரீரத்தை தகனம் செய்த பின், சாப்பிடுவது வழக்கமாயிருப்பதால் எது போனாலும் உயிரைக் காப்பாற்ற நினைக்கிறோம். அதைப்போல பிறர் கஷ்டங்களிருக்கட்டும்-உயிர்களையாவது தன் உயிர்போல் பார்க்கிறோமா? இல்லை. மலையைப் புரட்டுவதாகவும், கடலைக் கலக்குவதாகவும், வானத்தை வில்லாக வளைத்து விடுவதாகவும் ஆற்று மணலைக் கயிறாகத் திரித்துவிடுவதாகவும் வீரம்பேசும் மனிதன் எதிரியால் வரும் கஷ்டங்களை எண்ணி, விம்மி விம்மியழுகிறான். மனிதனுக்கு யாதொரு இம்சையும் செய்யாததும், கள்ளங்கபடின்றி ஓடி ஆடித்திரிந்தும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேறு யாருடைய உதவியையும் எதிர்பாராமல் மனிதன் மோசம் செய்யமாட்டானென்று அவனையே நம்பியிருக்கும் ஆடு கோழிகளைத் தன்னலம் கருதி துரோகம் செய்து, அஞ்சாமல் கொலைசெய்யத் துணிவது என்ன மனிதனின் கொடுமை! அவைகளின் நெஞ்சம் எப்படித்துடிக்கும்? மனிதனின் இவ்வளவு பந்தோபஸ்தையும் மீறி எதிரி கொன்று விட்டால் சர்க்காரில் அவனைப் பிடித்து, விசாரித்துத் தூக்கிலிடுகிறார்கள். இது கற்பனையல்ல; தினந்தோறும் உலகத்தில் நடக்கும் நடபடிக்கை. இதிலிருந்து ஒரு மனிதனை மற்றொருவன், மனதாலும் வாக்காலும் சரீரத்தாலும் இம்சிக்கச் சம்மதிப் பதில்லையென்றும், ராஜாங்கத்தில் குற்றத்தின் தன்மைக்குத் தக்கபடி தண்டனை விதிக்கிறார்களென்றும் நன்கு தெரிகிறது. தற்கால அரசாங்கங்களில் வக்கீல்களுக்கு வயிற்றுப் பிழைப்புக்கு இடம் கொடுக்கும் எண்ணிறந்த சட்ட திட்டங்களிருந்தாலும் கொடுங் குற்றம் செய்யும் மனிதனும் எதிர் வாதம் செய்ய இடங்கொடுத்து அவனைத் தண்டிக்கும்போது, குற்றம் அறியாத நிரபராதிகளான ஜீவராசிகளைக் கொல்வது குற்றமென்று அவைகளுக்கு உயிர்ப் பிச்சை கிடைக்க வழியில்லை. அம்மட்டோ! அவைகளைக் கொல்லுவதற்கும், கொன்ற மாமிசத்தை விற்பதற்கும் சரியான கட்டடங்கள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். கொடுமை! கொடுமை!! அவைகளின் உயிர் மனிதன் மயிர் மாதிரி கருதப்படுகிறது. என்னே காலத்தின் கொடுமை! மனிதன் பேய்க்கோலம் கொள்ளவும் வந்துவிட்டதே. ஈசா! கருணைசெய்ய வேணும். [illegible] மனிதன் உயிர், மிருகங்கள் பக்ஷியை [illegible] என்ற வித்தியாசமில்லாமல் எல்லா உயிர்களுக்கும் சமமென்ற மதிப்பு வைத்து நீதி வழங்கினார்கள். மனுநீதி கண்ட சோழ மகாராஜன் மகன் பவனி போன தேர் ஒரு பசுக்கன்றின் மேலேறிக் கொன்றுவிட்ட குற்றத்திற்காக இளவரசனை அரசனே தேர்க்காலில் வைத்து நசுக்கி ராஜ நீதியை நிலை நாட்டவில்லையா? உடனே பரமசிவன் ரிஷப பாரூடராய்த்தோன்றி இளவரசனுக்கு உயிர் கொடுத்து, மோக்ஷமளிக்கவில்லையா? இதுவல்லவா அரச நீதி? இதுவன்றோ தெய்வத்தன்மை? தற்கால வித்தியாசாலைகளில் இத்தகைய சரித்திரங்களின் உண்மைகளை உணர்த்துவது பிரதானமில்லாமல் போய்விட்டபடியால் தரும தேவதை தாண்டவமாடிய தமிழ் நாட்டிலே தேவதைகளின் திருவிழாத் தேர்களுக்கும், தேவதைகளுக்கும் ஆடுகோழிகளின் உயிரைப் பலிகொடுக்கும் வழக்கம் இடைக்காலத்தில் ஏற்பட்டிருக்கிறது. எந்தக் காலத்திலோ கொல்லப்படும் உயிர்கள் படுகிற துன்பத்தில் கொஞ்சமும் இரக்கமில்லாத யாரோ கட்டிவிட்டகதை காலப்போக்கில் அனேக மனிதர்களை நம்பும்படி செய்தது இப்போது வினையாயிருக்கிறது. கெட்ட காரியம் செய்பவர்களைத் தெய்வம் தண்டிக்குமென்று நம்புகிறோம். ஆடு கோழிகள் யாருக்கும் இம்சை செய்யாமலிருக்கும்போது அவைகளைக் கொண்டு வந்து பலிகொடுங்களென்று தெய்வம் கேட்குமா? தனக்கு உயிர்ப்பலி வேண்டுமானால் தானே எடுக்கமுடியாமல் கேவலம் மனிதனிடம் பிச்சை கேட்கும் தெய்வம் தெய்வமாகுமா? அத்தகைய தெய்வமா மனிதனை ரக்ஷித்து வேண்டியவரம் கொடுக்கப் போகிறது? ஒரு நாளுமில்லை. தெய்வம் கேள்க்கிறதாக உயிர்ப்பலியிடுவது மோசம். தெய்வம் உயிர்ப்பலி கேட்கவில்லை யென்பது சத்தியம். முடி இறக்கின மயிரை போட்டுவிட்டு வருவதுபோல வெட்டின ஆட்டின் உடலைப் போட்டு விட்டா வருகிறோம்? உண்மையில் தெய்வம் பலி கேட்டால் பூசாரிக்குத் தலை என்ற கட்டுப்பாடு இருக்காது. தெய்வம் உயிர்ப்பலி கேட்கிறதாக உண்மையில் நம்புகிறவர்கள் இனியாவது இது பூசாரி மோசமென்று நம்பக்காரணமில்லையா? இதுவரை போனது போகட்டும். இனியாவது கொஞ்சம் மனம் மாற வேண்டும். பிறரால் துன்பம் வரும்போது, ஆத்திரப் பட்டுத்துள்ளித் துடிக்கும் நாம், ஆடு கோழிகளின் நெஞ்சம் பதை பதைக்க கதறித் துடி துடிக்க கழுத்தை அறுப்பது தர்மமா? நீதியா? பொய், சூது வாதுகள், குடி, விபசாரம் முதலிய கெட்ட நடவடிக்கைகள் மனிதனுடைய யோக்கியதைக்கு ஏற்றதல்ல. இதையாரும் ஒப்புக்கொள்ளுகிறோம். அத்தகைய பாதகங்களுக்கெல்லாம் தலைமையாம் கொலைத் தொழிலை நிறுத்த வேண்டியது மனிதனுடைய முதல் கடமையல்லவா? ஒரு பொய்யன் உண்மை பேச ஆரம்பித்தால் அவனைக் கொஞ்சம், கொஞ்சமாக நம்புகிறோம். மோசம், குடி, விபசாரம் இவைகளை தொழிலாயுள்ளவர்களும் அவைகளை விட்டு விட்டால் இவர்களை மன்னித்து இப்போது நல்ல வழிக்குத் திரும்பி விட்டார்களென்று கௌரவமாய்ப் பேசுவது உலக வழக்கம். ஆனால் கொலை செய்யும் ஒருவன் இனி செய்யவேண்டிய துஷ்டக்காரியம் வேறில்லை. அவன் இனி நல்லவழிக்கு வருவானென்று யாரும் ஒப்புக்கொள்வது கடினம். அவன் கொன்ற உயிர் தான் திரும்புமா? பதிலுக்காவது வேறே உயிர் கொடுக்க முடியுமா? முடியாது. ஒரு உயிர் (குழந்தை) வேண்டுமென்று தவம் செய்யும் மனிதர்கள் முன் பின் யோசியாமல் எத்தனையோ உயிர்களைக் கொலை செய்வது நீதியா? தர்மமா? அதுவும் கேவலம் அழியும் சரீர வளர்ச்சியாக உயிரைக் கொன்று அதன் மாமிசத்தைப் புசிக்கலாமா?

ஒரு காரியம் நல்லதோ, கெட்டதோ வழக்க பழக்கத்தில் வந்து விட்டால் மனம் ஒத்துக்கொண்டு அது சகஜமாய்க் குற்றம் குறை தெரியாமல் போவது போல, கொலைத்தொழில் (கோழி ஆடுகளைக் கொல்வது வேறு, மனிதனைக் கொல்வது வேறில்லை; எல்லாம் ஒன்றே) வழக்கத்திற்கு வந்து [illegible] யாய்க் காட்டவேண்டிய அன்பு, கருணை, இரக்கம், பக்ஷாத்தாபம் குறைந்து வருகிறது. மனிதன் நெஞ்சில் கொடுமை குடிகொள்ள இடம் கொடுக்கக் கூடாது. அன்பு, இரக்கம், கருணை இடம் பெற வேணும். இனியாவது எல்லோருடைய மனமும் மாறி நாமும் வாழ்வோம்; மிருகங்களும், பக்ஷிகளும், வாழட்டு மென்று கருணை கொண்டு அவைகளைக் கொல்லாமல் வேலை வாங்கியும் எருவை உபயோகித்து, அதிலிருந்து நல்ல வெள்ளாண்மை விளைந்து அதன் மூலமாகவும், பால், மோர், நெய், மூலமாகவும், சரீர சுகம் பெற்றும் இனிய பாடல்களைக் கேட்டும் சுகமடைவோம்; ஆனந்த முறுவோம். கொலை செய்ய வேண்டாம். கொன்று தின்ன வேண்டாம்.

---

## வெள்ளையர் கொடுமை.

### உயிருடன் தோல் உரித்தல்.

#### நீக்ரோவர் துயரம்.

என்னே நாகரீகத்தில் மிகப் பிரசித்திபெற்ற வெள்ளையர் கொடுமை! அமெரிக்கா தேசத்தில் நடுத்தெருவில் ஜனங்கள் ஒரு வருக்கொருவர் அடித்துக் கடிந்துத் துன்புறுத்திக் கொள்ளுவதென்றால் இதைவிடக் கேவலம் வேறொன்றும் வேண்டுவதில்லை. இவ்விதமாக 4000 ஜனங்களுக்கு மேல் துன்பத்திற் காளாகி யிருக்கின்றனர். கேவலம் மிருகஜாதிகள்கூட தங்களினத்தைத் துன்புறுத்த அஞ்சும். இவர்கள் செய்யும் அநீதியைக் கண்டால் மிருகத்திற்கும் தாழ்ந்தவர்களென்றே கூற வேண்டும்.

#### செய்த கொடுமைக்கு தெய்வப் பிரார்த்தனை.

இக்கொடுமைகளைச் சகிக்க மாட்டாமல் மாதா கோவில்களின் ஐக்கிய சங்கத்தார், இவ்விதமான கொடுமைகளினின்றும் நாட்டை விடுவிக்க, கொடுமை செய்த ஜனங்களெல்லாம் பிப்ரவரி மாதம் 12-ந் தேதியன்று மாதாகோவில்களில் தெய்வப் பிரார்த்தனை செய்யும்படிக்குத் தாங்கள் ஏற்படுத்திய கமிஷன் மூலமாய் செய்தி விடுத்திருக்கின்றனர். அவ்விதமாக பிரார்த்தனை செய்யும் ஞாயிற்றுக்கிழமை தினத்திற்கு "ஜாதி ஒற்றுமை ஞாயிறு" என்று பெயரிட்டிருக்கின்றனர்.

அவர்கள் விடுத்த அறிக்கைப்படி "உயிருடன் தோலுரித்தல்" என்பது, அக்கொடுமைகளைச் செய்யாதவர்களையும் அப்பாவத்திற்குள்ளாக்குகின்றது. எந்தச் சமூகத்தினர் சட்டத்துக்கு மாறாக நியாயாதிபதிகள் செய்யும் வேலைகளைத் தாங்களே செய்ய முயற்சிக்கின்றனரோ அச்சமூகத்தினர், ஜனங்களின் கொடுமை ஆட்சிக்கு வழிகாட்டுகின்றனர். அவ்விதம் செய்வது நமது சமூகக்கொள்கைகளின் அஸ்திவாரத்தையே தகர்த்து விடுவதுபோலாகிறது. ஆகையினால் அவ்விதக் கொடுமைகளினின்றும் தேசத்தை விடுவிக்கவும், பாமர ஜனங்களுக்கு நீதியின் மகிமையைக் கற்பித்து ஒருவர்க்கொருவர் அன்பு பாராட்டச் செய்யவும் தேவப் பிரார்த்தனை தான் சிறந்த வழி. தேவப் பிரார்த்தனை செய்யுங்காலத்தில் ஜனங்கள் தாங்கள் செய்த கொடுமைகளை உணர்ந்து பச்சாத்தாபப்படுவது மல்லாமல், அவைகளை மறுபடியும் செய்யாமலிருக்கும்படியான உணர்ச்சியையுமடைகிறார்கள்.

இதுவரையில் 4000 ஜனங்களுக்கு மேல் உயிருடன் தோலுரிக்கப்பட்டிருக்கிறார்களென்றால் அச்சமூகத்தினரில் மானமுள்ளவர்களுக்கு அவ்விதக் கொடுந்தொழில் எவ்வளவு அவமானத்தையும், பயத்தையும் விளைவித்திருக்கின்றதென்பது யாவரும் உணர்ந்த விஷயம். இவ்விதச் செய்கை பல ஆண்டுகளாக நடந்து வருகின்றது. 1926-ம் வருஷத்தில் ஐக்கிய மாகாணங்களில் சுமார் 30 பேர்களுக்குக் குறையாமல் தோலுரிக்கப்பட்டிருக்கின்றன[illegible] றென்றால், வேறுமற்றெந்த வழியாலும் இக்கொடுமையினின்றும் நம் சமூகத்தினரைக் காக்க முடியாது.

#### பிரார்த்தனை செய்யும் விதம்.

மாதா கோவில் ஒற்றுமைச் சங்கத்தார் விடுத்த அறிக்கையில் மேற்கூறிய படி கொடுமைகளை விரித்துரைத்த பிறகு அவைகளைப்போக்க ஜனங்கள் பின்வருமாறு தேவப்பிரார்த்தனை செய்யவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கின்றனர்:—

"நாம் எல்லாரும் ஒரே உதிரப்பெருக்கையுடையவர்களென்கிற விஷயத்தையும், நம் எல்லோருக்கும் ஒரே பிதாவென்கிற விஷயத்தையும் முற்றும் மறந்து அநீதிகளைச் செய்ததற்காக கர்த்தர் எங்களை மன்னிக்கக்கடவர். எங்களில் சிலர் செய்த கொடுமைகளை முற்றும் கவனிக்காமல் அசட்டை செய்து வந்ததினால் நாங்களும் அந்த பாபங்களுக்குட்படுகிறோம். நாங்கள் உயர்ந்த ஜாதியரென்று மூட நம்பிக்கை வைத்துக்கொண்டு செய்த அநீதிகளையெல்லாம் தேவன் மறந்துவிட நாங்கள் பிரார்த்திக்கின்றோம். மேலும் இன்னும் பல அநீதிகள் நடக்கவண்ணம் அரசாங்க அதிகாரிகள் தங்கள் உயிரையும்திரணமாக வெண்ணிக்காத்து வந்ததைப்பற்றி எங்கள் மனமார்ந்த வந்தனத்தைத் தேவன் மூலமாக அவர்களுக்கு செலுத்துகின்றோம்."

#### உரிக்கப் பட்டவர்களின் விபரம்.

ஜாதி ஒற்றுமைக் கமிஷன் காரியதரிசியாகிய டாக்டர் ஜியார்ஜ் ஹெயின்ஸ் வெளியிட்டுள்ள அறிக்கைப்படிக்கு 4551 பேர்கள் உயிருடன் தோலுரிக்கப் பட்டவர்களென்றும், அவர்களில் முக்கால் பங்கு நீக்ரோவரென்றும், அவர்களிலும் நூற்றுக்குத்தொண்ணூற்றொன்று பேர் பேதை ஸ்திரீகளென்றும் குறிப்பிட்டிருக்கின்றனர். மேலும் மாஸா செஸட்ஸ், நியூஹாம்ப்ஷையர், ரோட்டு தீவு, வெர்மாண்டு ஆகிய இந்நான்கு இடங்களில் தான் தோலுரிக்கப் பட்ட கொடுமை குறிக்கப்படவில்லையென்றும், அமெரிக்காவில் மற்றை எல்லாப்பாகங்களிலும் இவ்விதக் கொடுமைகள் நடந்து வருகின்றனவென்றும் குறிப்பிட்டிருக்கிறார். 1922-ம் வருஷத்தில் ஐக்கிய மாகாணங்களில் 57 பேர் தோலுரிக்கப்பட்டனர்; 1923-ல் 33 பேர் உரிக்கப்பட்டனர். 1924 முதற்கொண்டு 1925-ம் வருஷம்வரைக்கும் வருடா வருடம் சராசரி 16 பேர் உரிக்கப்பட்டு வந்தனர். 1926-ல் 30 பேரும், 1927-ல் நவம்பர் 15 தேதி வரைக்கும் 15 பேர்கள் இத்துன்பத்திற்களாகினரென்றும், அவர்களில் இருவர் உயிரோடு கொளுத்தப்பட்டனரென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

---

## ஓர் மறுப்பு.

சுமார் 4 மாதங்கட்கு முன்னர் "அகில இந்திய நூல் நூற்பவர் சங்கம்" காரியதரிசி ஸ்ரீமான் எஸ். ராமநாதன் அவர்கள் "திருப்பூர் கம்போடியா பருத்தி விவசாயம் & கதர் உற்பத்தி கம்பெனி லிமிட்டெட்" ஸ்தாபனம் மோசகரமானதெனப் பொது ஜனங்களுக்கு எச்சரிக்கை கொடுத்திருப்பது அவதூறானதென்றும், அவர் எச்சரிக்கையில் கண்ட விஷயங்கள் பொய்யெனவும், இக் கம்பெனிக்கு சில கனவான்கள் நற்சாக்ஷிப் பத்திரங்கள் நல்கியுளாரெனவும், இக் கம்பெனி மகாத்மாகாந்தியடிகளின் நன்மதிப்புக் குரித்தான தொன்றென்றும் ஆகையால் ஸ்ரீமான் எஸ். ராமநாதன் அவர்கள் எச்சரிக்கை கண்டு இக்கம்பெனிமேல் சந்தேகங்கொண்டு பங்குதார்களாய்ச் சேர்ந்து கொள்ளாமலிருக்க வேண்டாமெனவும் மறுத்தெழுதி, ஸ்ரீமான் எஸ். ராமநாதனவர்கள் பரப்பி விட்ட பொய்யான விஷயங்களால் இக் கம்பெனிக்கு கஷ்ட மேற்பட்டிருக்கிறதெனவும் அது வகைக்கு அன்னவர்மேல் பிராதுகொடுக்க ஏற்பாடு செய்துவருவதாகவும் ஷை கம்பெனியின் கௌரவக்காரியதரிசி ஸ்ரீமான் கே. வி. சுப்பிரமணியம் அவர்கள் தெரிவிக்கிறார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

(2-ம் பக்கத்தின் தொடர்பு.)

கடைசியாக, இவ்விஷயம் குடியேற்ற நாட்டு மந்திரியிடம் சென்றது. மேற்கூறிய 1885-ம் வருஷத்து 3-வது சட்டத்தின்படி, வியாபாரம் செய்வதற்காக டிரான்ஸ்வாலில் குடியேறும் ஒவ்வோர் இந்தியனும் 25 பவுன் கொடுத்துப் பெயரைப் பதிவு செய்துகொள்ளவேண்டும். இல்லாவிடில் கடுமையான தண்டனைகள் விதிக்கப்படும். இந்தியன் எவனும் ஓர் அங்குல நிலமேனும் வைத்துக்கொள்ள முடியாது. குடியுரிமைகளும் அவனுக்குக்கிடையா. இவையெல்லாம் அநீதமான நிர்ப்பந்தங்கள் என்பது வெளிப்படையாதலின், டிரான்ஸ்வால் அரசாங்கம் வாதத்தில் அவற்றை நியாயமென்று ஸ்தாபிக்கமுடியவில்லை. போயர்களுக்கும் பிரிட்டிஷாருக்கும் 'லண்டன் ஒப்பந்தம்' என்னும் உடன்படிக்கை ஒன்று இருந்துவந்தது. இதனுடைய 14-வது பிரிவு பிரிட்டிஷ் குடிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் பிரிவாகும். மேற்படி சட்டம் இப்பிரிவுக்கு மாறானது என்று பிரிட்டிஷ் அரசாங்கத்தார் ஆட்சேபித்தார்கள். போயர்கள், பதிலுக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்கனவே, நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ இச் சட்டத்திற்குச் சம்மதந் தந்துவிட்டது என்று வாதித்தார்கள்.

இவ்வாறு பிரிட்டிஷ், போயர் அரசாங்கங்களுக்குள் விவாதம் எழுந்தது. விவாதம் மத்தியஸ்தத்திற்கு விடப்பட்டது. மத்தியஸ்தரின் தீர்ப்பு திருப்திகரமாயில்லை. அவர் இருகட்சியாரையும் மகிழ்விக்க முயன்றார். இதனால் இந்தியர்களே நஷ்டமடைந்தார்கள். அவர்களுக்குக் கிடைத்த ஒரே அநுகூலம் என்னவெனில், அவர்கள் எவ்வளவு நஷ்டமடைந்திருக்கக் கூடுமோ அவ்வளவு அடையவில்லையென்பதே. மத்தியஸ்தரின் தீர்ப்பையனுசரித்து 1886-ம் ஆண்டில் சட்டம் திருத்தப் பெற்றது. பதிவு செய்து கொள்ளும் கட்டணம் 25 பவுனிலிருந்து 3 பவுனாகக் குறைக்கப்பட்டது. இந்தியர்கள் ஸ்தாவர சொத்துக்களை வைத்துக்கொள்ள முடியாதென்னும் பிரிவு எடுக்கப்பட்டு, அவர்களுடைய வாசத்திற்கென்று டிரான்ஸ்வால் அரசாங்கம் ஒதுக்கிவைக்கும் தெருக்களிலும், பகுதிகளிலும் நிலம் சொந்தமாய் வைத்துக்கொள்ளலாமென்று விதிக்கப்பட்டது. ஆனால் திருத்தப்பட்ட இப்பிரிவின் நிபந்தனைகளை மேற்படி அரசாங்கம் உண்மையாக நிறைவேற்றிவைக்கவில்லை. ஒதுக்கிவைத்த பகுதிகளிலும் சொந்த நிலம் வாங்கும் உரிமையை இந்தியர்களுக்கு அளியாமலே இருந்தது. இந்தியர்கள் இருந்த எல்லாப்பட்டணங்களிலும், அவர்களுடைய வாசத்திற்குப் பட்டணித்திலிருந்து வெகுதூரத்தில் ஆபாசமான பகுதிகளே ஒதுக்கப்பட்டன. இவ்விடங்களில் தண்ணீர்வசதி, விளக்குப் போடும் ஏற்பாடு, சுகாதார முறைகள் முதலிய எதுவும் இல்லை. இவ்வாறு இந்தியர்கள் டிரான்ஸ்வாலின் பஞ்சமர்கள் ஆனார்கள். மேற்படி இந்தியர் இருப்பிடங்களுக்கும், இந்தியாவில் தீண்டாதாரின் வாசஸ் தலங்களுக்கும் எவ்வகை வேற்றுமையுமில்லையென்பது உண்மையாகச் சொல்லலாம். தீண்டாதாரைத் தொடுதலும், அவர்கள் இருப்பிடங்களுக்கு அருகில் வசிப்பதும் தீட்டு என்பதாக ஹிந்துக்கள் நம்புவது போலவே, டிரான்ஸ்வால் வெள்ளைக்காரர்கள், இந்தியர்களைத் தொடுதலும், அவர்கள் அருகில் வசிப்பதும் தங்களை அசுத்தப்படுத்திவிடும் என்று கருதினார்கள். மற்றும், டிரான்ஸ்வால் அரசாங்கம் 1885-ம் வருஷத்து 3-வது சட்டத்துக்கு, இந்தியர்கள் வியாபாரங் கூட அவர்களுக்கென்று ஒதுக்கிவைத்த இருப்பிடங்களிலேயே செய்ய வேண்டுமென்று பொருள்செய்தார்கள். சட்டத்திற்கு வியாக்யானம் செய்யும் அதிகாரம் டிரான்ஸ்வாலின் சாதாரண நீதி மன்றங்களுக்கே உண்டென்று மத்தியஸ்தர் தீர்ப்புச் சொல்லியிருந்தார். ஆகலின் இந்திய வியாபாரிகளின் நிலை மிகவும் சங்கடமாயிற்று. ஆயினும், சில விடங்களில் சமரசப் பேச்சுகளினாலும், மற்றும் சில விடங்களில் [illegible] வேறு சில இடங்களில் தங்களுக்கிருந்த சொற்ப செல்வாக்கை உபயோகப்படுத்தியும் அவர்கள் கூடியவரை தங்கள் நிலைமையைப் பாதுகாத்து வந்தார்கள். போயர் யுத்தம் தொடங்கிய போது டிரான்ஸ்வால் இந்தியர்கள் இத்தகைய நெருக்கடியான துன்ப நிலையிலேயே இருந்து வந்தனர்.

இனி, ஆரஞ்சு பிரீ ஸ்டேட்டிலிருந்த நிலைமையை ஆராய்வோம். அங்கே பத்துப் பன்னிரண்டு இந்தியர்கள் கடைவைப்பதற்குள்ளாக, வெள்ளைக்காரர்கள் பலமான கிளர்ச்சி தொடங்கிவிட்டார்கள். பார்லிமெண்ட் ஒரு கடுமையான சட்டமியற்றி, அதன் கீழ் இந்திய வியாபாரிகள் எல்லாருக்கும் பெயரளவில் நஷ்ட ஈடு கொடுத்து, நாட்டை விட்டு அப்புறப்படுத்திவிட்டது. அச்சட்டத்தின்படி இந்தியன் எவனும் எந்த முறையிலும் ஸ்தாவர சொத்து வைத்துக்கொள்ளக்கூடாது; சொந்தமாக வியாபாரமோ விவசாயமோ செய்யக்கூடாது; வாக்குரிமையும் அவனுக்குக் கிடையாது. விசேஷ அநுமதி பெற்றுத் தொழிலாளியாகவோ, ஹோட்டல் வேலைக்காரனாகவோ வேண்டுமானால் குடியேறலாம். ஆனால் இந்த அருமையான அநுமதிகூட அதிகாரிகள் எல்லார் விஷயத்திலும் தரவேண்டுமென்று கட்டாயமில்லை. இச்சட்டத்தின் பயனாக, மரியாதையுள்ள இந்தியன் எவனும், இரண்டு நாளைக்குக்கூட அந்த இராஜ்யத்தில் பெருங்கஷ்டங்களுக்காளாகாமல் வசிக்க முடியாமலிருந்தது. போயர் யுத்தம் தொடங்கியபோது ஆங்கு ஒரு சில ஹோட்டல் வேலைக்காரர்களைத் தவிர வேறு இந்தியர் எவருமில்லை.

கேப்காலனியிலும் இந்தியர்களுக்கு விரோதமான பத்திரிகைக் கிளர்ச்சி நடந்து வந்தது. அவர்கள் அங்கு நடத்தப்பட்ட முறையில் இழிவுபடுத்தும் அம்சங்கள் இல்லாமலில்லை. உதாரணமாக, இந்தியக் குழந்தைகள் பொதுப் பள்ளிக்கூடங்களுக்குப்போக முடியாது. இந்தியப் பிரயாணிகளுக்கு ஹோட்டல்களில் இடங்கிடைத்தல் மிக அருமை. ஆனால் நெடுங்காலம் வரையில், வியாபாரம் செய்வதற்கும், நிலம் வாங்குவதற்கும் நிர்ப்பந்தங்கள் ஏற்படவில்லை.

இந்நிலைமைக்குக் காரணங்கள் உண்டு. பொதுவாகக் கேப் காலனியிலும், சிறப்பாகக் கேப் டவுனிலும், மலாய் ஜாதியார் அதிகமுண்டு என்று முன்னமே சொல்லியிருக்கிறேன். மலாய்கள் முஸ்லிம்களாதலின் அவர்கள் விரைவில் இந்திய முஸ்லிம்களிடமும், பின்னர் மற்ற இந்தியர்களிடமும் பழக்கம் செய்துகொண்டார்கள். மேலும் சில இந்திய முஸ்லிம்கள் மலாய் ஸ்திரீகளை மணமும் செய்துகொண்டார்கள். கேப்காலனி அரசாங்கத்தார் மலாய்களுக்கு விரோதமாகச் சட்டம் எப்படி இயற்ற முடியும்? கேப் காலனியே அவர்கள் தாய் நாடாகும். டச்சு மொழியே அவர்கள் தாய் மொழியாகும். முதலிலிருந்தே அவர்கள் டச்சுக்காரர்களுடன் வசித்து வந்தவர்களாதலின், பெரும்பாலும் அவர்களுடைய நடை உடை பாவனைகளையே மேற்கொண்டிருந்தார்கள். இக் காரணத்தினால் நிற வேற்றுமை யுணர்ச்சி கேப் காலனியை அதிகம் பாதியாமலிருந்தது.

மற்றும், கேப்காலனியே முதன் முதலில் வெள்ளைக்காரர் குடியேறிய இடமாதலினாலும், தென்னாப்பிரிக்காவில் நாகரீகப் பயிற்சியின் மத்திய ஸ்தலமாதலினாலும், அங்கு நிதான புத்தியும், பெருந் தன்மையும், விசால இதயமும் படைத்த வெள்ளைக்காரர் பலர் தோன்றினார்கள். உலகிலே உள்ள எந்த இடமாயினும் சரி, எந்த சாதியாயினும் சரி, தகுந்த வசதிகளும், கல்வியும் மட்டும் அளித்தால் மனித வர்க்கத்துக்கே சிறப்புத் தரும் உன்னத புருஷர்களைத் தோற்றுவிக்கக் கூடுமென்பது என் அபிப்பிராயம். இத்தகைய மனிதர்களைத் தென்னாப்பிரிக்காவில் எல்லாப் பகுதிகளிலும் பார்க்க எனக்குக் கொடுத்து வைத்திருந்தது. ஆயினும் மற்ற விடங்களில் விட கேப் காலனியில் இத்தகைய மனிதர்கள் மிக அதிகம். [illegible] நன்கு தெரிந்தவருமானவர் மிஸ்டர் மெர்ரிமான் என்று சொல்லலாம். கேப்காலனிக்கு 1872-ம் ஆண்டில் பொறுப்பாட்சி வழங்கப்பட்ட பின்னர் அதிகாரத்துக்கு வந்த முதல் மந்திரி சபையிலும், அதற்குப் பின் வந்த மந்திரி சபைகளிலும் அவர் இருந்தார். கடைசியாக, 1910—ல் தென்னாப்பிரிக்கா யூனியன் அரசாங்கம் ஏற்பட்டபோது இருந்த மந்திரி பதவி வகித்தார். அவர் 'தென்னாப்பிரிக்கா கிளாட்ஸ்டன்' என்று அழைக்கப்பட்டார். இவரையல்லாமல், மால்டினோ குடும்பத்தாரும், ஷ்ரீனர் குடும்பத்தாரும் இருந்தனர். ஸர். ஜான் மால்டினோ 1872-ம் ஆண்டில் காலனியின் முதலாவது பிரதம மந்திரியா யிருந்தவர். மிஸ்டர் டபிள்யூ. பி. ஷ்ரீனர் பெயர் பெற்ற அட்வொகேட். சில காலம் அட்டர்னி ஜெனரல் பதவியும், பின்னர் முதன் மந்திரி பதவியும் வகித்தார். அவருடைய சகோதரி ஆலிவ் ஷ்ரீனர் புலமை வாய்ந்த பெண்மணியாவர். தென்னாப்பிரிக்காவில் அவர் பெரிதும் பொது ஜனங்களின் அபிமானத்தைப் பெற்றவர். ஆங்கில மொழி பேசப்பட்ட இடங்களி லெல்லாம் அவரை யாவருக்கும் நன்கு தெரிந்திருந்தது. "கனவுகள்" என்னும் புத்தகத்தை எழுதியதிலிருந்து அவர் பெயர் பிரசித்தியாயிற்று. மக்கட் குல மனிதனிடமும் அவர் கொண்டிருந்த அன்பு அளவற்றதாகும். அவ் வன்பு அவர் கண்களின் தோற்றத்தில் பொங்கி வழிந்தது. அவர் அவ்வளவு கீர்த்தி பெற்ற குடும்பத்தில் பிறந்தவராயினும், புலமைவாய்ந்த மாதரசியாயினும், அவருடைய வழக்க பழக்கங்கள் மிக எளியவையாகும். தமது வீட்டில் அவர் தாமே பாத்திரங்களைத் துலக்குவது வழக்கமாம். மிஸ்டர் மெர்ரிமானும், மால்டினோ, ஷ்ரீனர் குடும்பத்தினரும் நீகிரோவரின் கட்சியை எப்போதும் ஆதரித்து வந்தார்கள். நீகிரோவரின் உரிமைகளுக்கு அபாயம் ஏற்பட்ட போதெல்லாம் அவர்கள் அவ் வுரிமைகளைத் திட்டமாகத் தாங்கி நின்றார்கள். இந்தியர்களிடமும் அவர்கள் அன்பு காட்டினார்களாயினும், நீகிரோவருக்கும் இந்தியருக்கும் அவர்கள் ஒரு வேற்றுமை கற்பித்தார்கள். வெள்ளைக்காரர் வருவதற்கு நெடுநாள் முன்பிருந்தே, நீகிரோவர் தென்னாப்பிரிக்காவின் குடிகளாதலால், அவர்களுடைய இயற்கை உரிமைகளை வெள்ளைக்காரர் பறிக்கலாகா தென்பது அவர்களுடைய வாதம். ஆனால் இந்தியர்களைப் பொறுத்தவரை, அவர்களால் ஏற்படும் தகுதியற்ற போட்டி அபாயத்தை நீக்கச் சட்டங்கள் செய்தல் நியாயத் தவறாகா தென்று அவர்கள் கருதினார்கள். எனினும், அவர்களுடைய இதய அந்தரங்கத்தில் இந்தியர்களை அவர்கள் நேசியாமலில்லை. ஸ்ரீ கோகலே தென்னாப்பிரிக்காவுக்கு வந்த போது, கேப்டவுனில் நடந்த நகர மண்டபக் கூட்டத்திற்கு மிஸ்டர் ஷ்ரீனர் தலைமை வகித்தார். முதல் முதலாகப் பொது வரவேற்பு ஸ்ரீ கோகலேயுக்கு அளிக்கப்பட்டது இங்கே தான். மிஸ்டர் மெர்ரிமானும் அவரை மிகுந்த மரியாதையுடன் நடத்தியதல்லாமல் இந்தியர் கட்சியில் தமது அநுதாபத்தைத் தெரிவித்தார். மிஸ்டர் மெர்ரிமானைப் போன்ற இன்னும் பல வெள்ளைக்காரர்களும் இருந்தார்கள். இவ் வகுப்பாருக்கு உதாரணமாகவே, பிரசித்தியான மேற்படி பெயர்களைக் குறிப்பிட்டிருக்கிறேன்.

கேப்டவுன் பத்திரிகைகளும், தென்னாப்பிரிக்காவின் மற்றப் பகுதிகளிலிருந்த பத்திரிகைகளைப் போல் இந்தியருக்கு அவ்வளவு விரோதமாயில்லை.

மேற் கூறிய காரணங்களினால் மற்றப் பகுதிகளைக் காட்டிலும் கேப்காலனியில் ஜாதி பகைமை எப்போதுமே குறைவாயிருந்து வருகிறதாயினும், மற்றக் காலனிகளில் ஓயாது வெளிப்பட்டுக் கொண்டிருந்த இந்தியருக்கு விரோதமான உணர்ச்சி அங்கும் அடிக்கடி பிரவேசித்தல் இயல்பே யன்றோ? எனவே, அங்கேயும் நேட்டாலில் செய்யப்பட்டது போன்ற இரு சட்டங்கள் செய்யப்பட்டன. அவை குடி [illegible] சட்டமும் ஆகும்.

## தமிழர் சீர் திருத்த நூற்பதிப்புக் கழகம், திருச்சினாப்பள்ளி.

இப் பெயரிய கழகம் ஒன்று ஒத்துழையாமை வீரர் பூவாளூர் திருவாளர் நா. சு. மு. செல்வக்கணபதி செட்டியாரவர்களைத் தலைமையாகக் கொண்டு தொடங்கப் பெற்றிருக்கிறது.

இயற்கைக்கும் அனுபவத்திற்கும் ஒத்துவராத சட்ட திட்டங்களைக் கற்பித்து, எல்லாம் வல்ல இறைவனால் படைக்கப்பட்ட மக்கள் சமூகத்தில் எண்ணிறந்த பிளவுகளை உண்டு பண்ணி, ஒருவரை ஒருவர் ஏமாற்றியும், அடித்தும், உதைத்தும் பிடுங்கிப் பிழைக்கத்தக்க வகையில் எழுதி வைக்கப்பட்டுள்ள வேதம், ஸ்மிருதி, ஆகமம் எனப்படும் ஆரியப் பார்ப்பனர்களின் நூல்களை நமது தரும சாஸ்திரங்களெனக் கூறி வருதலாலும், அதனைத் தழுவி நடத்தலாலும், அவை நமது இந்து சமூகத்தையே புரைப்புண் போல விருந்து அரித்து வருகின்றன. ஆதலால் ஆரியர்களது மதத்தின் மூலமும், அவர்களது வேதங்களின் மூலமும், மூடக் கொள்கை கட்கு அடிமைப் பட்டுக் கிடக்கும் நமது மக்களை விழிப்படையச் செய்வதற்குரிய (சன்மார்க்க நெறி பற்றிய) பல் வேறு நூல்களை வெளியிடுவது இக் கழக நோக்க மாகும்.

ஒரு ரூபாய்க்குக் குறையாத கையொப்பத் தொகை கொடுப்பவர்கள் உறுப்பினர்களாகக் கருதப்படுவரென்றும், அவர்கட்கு எல்லா வெளியீடுகளையும் அவ்வப்போது அனுப்பப் பெற வேண்டு மென்றும், ஐந்நூறுக்குக் குறையாத உறுப்பினர்கள் சேர்ந்த பின்னர் வெளியீடு வேலை தொடங்குவதென்றும் கழகத்தார் முடிவு செய்திருக்கின்றனர்.

தமிழ் மக்களின் நலத்தை விரும்பும் ஒவ்வொரு அபிமானியும் இயன்றதொரு பெருந் தொகையினைக் கொடுத்து ஆதரிக்குமாறு பெரிதும் வேண்டுகிறோம்.

விலாசம்:—

தமிழர் சீர்திருத்த நூற்பதிப்புக் கழகம்,
"சிவாஜி" காரியாலயம்,
பெரியகடை வீதி,
திருச்சினாப்பள்ளி.

ச. ம. சி. பரமசிவம்,
து. இராவண தாசன்,
காரியதரிசிகள்.

---

இவ்வாறு, முன்னர் இந்தியர்களுக்கு நன்கு திறந்திருந்த தென்னாப்பிரிக்கா கதவானது, போயர் யுத்தத்தின் காலத்தில் அவர்கள் நுழைய முடியா வண்ணம் அனேகமாகச் சாத்தப்பட்டு விட்டது என்று கூறலாம். டிரான்ஸ்வாலில் பதிவுக் கட்டணம் மூன்று பவுனைத் தவிர, குடியேற்றத்தைத் தடுக்கும் சட்டம் எதுவும் கிடையாது. ஆனால், நேட்டால், கேப்காலனி துறைமுகங்கள் இந்தியர்களுக்குச் சாத்தப்பட்ட போது, உள் நாட்டிலிருந்த டிரான்ஸ்வாலுக்கு அவர்கள் போவது கஷ்டமாயிற்று. போர்ச்சுக் கேயத் துறைமுகமான டெலாகோபே வழியாக அங்கே போகக் கூடும். ஆனால் போர்ச்சுக் கேயரும் ஏறக்குறைய பிரிட்டிஷாரைப் பின் பற்றினர். தனிப்பட்ட இந்தியர் சிலர் நேட்டால் அல்லது டெலாகோ பே வழியாக பல கஷ்டங்களுக் குள்ளாகியோ, துறை முக உத்தியோகஸ்தர்களுக்கு லஞ்சம் கொடுத்தோ டிரான்ஸ்வாலுக்குள் பிரவேசிக்கக் கூடியதாயிருந்த தென்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

"நவசக்தி"

---

மேகத்திடை சந்திரன்

[போன்றே

[illegible]

Tamil Heritage Foundation International Digital Library EBook collection